‘தமிழன்’ பத்திரிகை
வீடுகளுக்கு நேரடியாக
விநியோகிக்கப்படும்




QR ஐ ஸ்கேன் செய்து
தகவல்களை
பெற்றுக்கொள்ளுங்கள்.
0777983308



# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 67 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(22.09.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 06, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## உள்ளூராட்சி மன்ற வேட்புமனுக்களை

### இரத்தாக்க ஆலோசனை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு அமைச்சர்கள் ஆலோசனைக் குழு ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுவைச் சமர்ப்பித்த வேட்பாளர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமையால் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக நேற்று...

02 பக்கம்

## தமிழ் எம்.பிக்கள் தாக்கு: அமெ. செனட் குழு கண்டனம்

இலங்கையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுவது குறித்து அமெரிக்க செனட்டின் வெளிவிவகாரக் குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்தும் இந்த தாக்குதல்கள் இடம்பெற்றவேளை தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்காக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறித்தும் கரிசனை கொண்டுள்ளோம் என செனட் குழு தெரிவித்துள்ளது.

» 02 பக்கம்



## சர்வதேச விசாரணைக்குத் தயார்

## பிள்ளையான் சபையில் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்குத் தயாரென இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று(21) பாராளுமன்றத்தில் அறிவித்தார்...

02 பக்கம்

## கஜேந்திரன் எம்.பி. தாக்குதல்

## சந்தேகநபர்கள் பிணையில் விடுதலை

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலையில் திலீபனின் உருவச்சிலை ஊர்தி மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர்களுக்கு நேற்று(21) மாலை பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி திருகோணமலை - கொழும்பு வீதியினூடாக...

02 பக்கம்

## ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை

### நிரோஷன் பெரேரா வலியுறுத்து

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா நேற்று (21) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நிரோஷன் பெரேரா மேலும் கூறியதாவது,

உண்மையை வெளிக்கொணர உள்நாட்டுப் பொறிமுறை போதிய முயற்சிகளை மேற்கொள்ளாததால் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவையுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் ஒரு அரசியல் சதி என்று குற்றம் சாட்டப்பட்டு உள்நாட்டில் பல விசாரணைகள் நடத்தப்பட்டும் எந்த முடிவும் கிடைக்கவில்லை.



02பக்கம்

# சரத்-மைத்ரி முட்டிமோதல்!

## வசைபாடல்களால் நேற்று அதிர்ந்தது பாராளுமன்றம்





நா.தினுஷா

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தால், நேற்று (21) பிற்பகல் பாராளுமன்றத்தில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் கருத்து தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மீது தொடர்ந்தும் குற்றம் சுமத்தினார். அப்போது இருவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

அங்கு நடந்த உரையாடல் இது.

**பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா:**

இந்த சம்பவத்தில் இரண்டு சூத்திரதாரிகள் பின்னணியில் உள்ளனர். ஒருவர் இவர் (மைத்ரி). மற்றவர் கோட்டாபய. சுரேஷ் சலே ஒரு மிடில் ஓர்டர் பேட்ஸ்மேன் மட்டுமே. இவர் சிங்கப்பூரில் இருந்தபோது வெடிகுண்டு வெடித்தது. அவர் இலங்கைக்கு வராமல் ஹோட்டலில் பதுங்கியிருந்தார். படுக்கைக்கு அடியில் பதுங்கி இருந்தார். இதுகுறித்து...

02 பக்கம்

## ஜனாதிபதி செயலக விளம்பரம் வேண்டாம்

### விசேட அறிவிப்பு வெளியானது

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
Presidential Secretariat

ஜனாதிபதி செயலக பெயர்ப்பலகையை வாகனங்களில் காட்சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதி செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பெயர்ப்பலகைகளை காட்சிப்படுத்தும் எந்தவொரு வாகனமும் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடையவை அல்ல எனவும் அவை பொதுமக்களை ஏமாற்றும் போலியான முயற்சி எனவும் பதில் ஜனாதிபதி செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

## கனேடிய குடிமக்களுக்கு விசா வழங்குவதை இடைநிறுத்திய இந்தியா

12 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



மைத்ரியும் பொன்சேகாவும் ஜனாதிபதி கனவில இருக்கிறாங்கள்.. அதுதான் பிரச்சினை பாருங்கோ..


## தனுஷ்கவின் விசாரணை நிறைவு

## அடுத்த வியாழனன்று தீர்ப்பு

ஏ. அகீல் சிஹாப்

பாலியல் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை...

02 பக்கம்



## நாட்டை தெருவுக்கு கொண்டு வந்தவர்களை அமெரிக்க சுற்றுலா அழைத்துச்சென்ற ரணில்

## சபையில் சஜித் குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வுக்கு ஜனாதிபதி சென்றபோது, நாட்டை வங்குரோத்து செய்த ஒரு குழுவை தன்னுடன் அழைத்துச் சென்றதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (21) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவினரை மகிழ்விப்பதற்காக இவ்வாறு செயற்படுகிறார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டு மக்களின் வரிப்பணத்தை இவ்வாறு வீணடிக்க வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகி...

02 பக்கம்



## மைத்ரியின் கடிதத்துக்கு நீதிமன்றம் தடைவிதிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை (21) தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

02 பக்கம்

## திலீபன் நினைவு வன்முறை வடிவமா?

### கொழும்பிலிருந்து சென்ற பொலிஸ் குழு யாழ். நீதிமன்றத்தில் மீள மனுத்தாக்கல்

தியாகி திலீபன் நினைவு நாள் அனுஷ்டிப்பு வன்முறையை தூண்டும் அபாயமுள்ளதால் உடனடியாக நினைவு நிகழ்வுகளை தடைசெய்ய வேண்டுமென யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

தியாகி திலீபன் நினைவு நிகழ்வை தடைசெய்ய வேண்டுமென யாழ்ப்பாணம் பொலிஸார் செவ்வாய்க்கிழமை (19) மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை தள்ளுபடி செய்து, நேற்றுமுன்தினம் (20) யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், பொலிஸ் திணைக்களத்தின் சட்டம், ஒழுங்கு பிரிவுக்கு பொறுப்பான...

02 பக்கம்

## உஷ்



கிரிக்கெட் வீரர் தனுஷ்கவை அவுஸ்திரேலிய நீதிமன்ற செயற்பாடுகளில் இருந்து காப்பாற்ற இலங்கை அரசின் உயர்மட்டத்தில் இருந்து முயற்சிகள் எடுக்கப்பட்டதாம்..

ஆனால் அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கு தீர்ப்பு வரவுள்ளதால் அந்த விடயத்தில் தலையிட அந்நாட்டின் அரச மேல்மட்டமும் தவிர்த்துவிட்டதாம்..

## 2023 உயர்தரப் பரீட்சை பிற்போடப்படும் சாத்தியம்

நா.தினுஷா

2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான திருத்தப்பட்ட திகதிகள் பரீட்சைகள் ஆணையாளரினால் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை தொடர்பில் நேற்று (21) பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உத்தேச 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப்...

02 பக்கம்

# கோழி இறைச்சி விலைக்குறைப்பு

கோழி இறைச்சியின் விலை நேற்று நள்ளிரவு முதல் கிலோ ஒன்றுக்கு 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நேற்று(21) மாலை அறிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி : 2,148 முறைப்பாடுகள் பதிவு

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட சம்பவங்கள் தொடர்பில் 2,148 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 1,337 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பணியகம் கூறியுள்ளது.

இந்த வருடத்தில் பதிவான முறைப்பாடுகளின் அடிப்படையில், 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் தெரிவித்துள்ளார்.

# 40 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டின் முதன்மைக் கணக்கு இருப்பு உயர்வு

## பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



பல்வேறு புதிய சீர்திருத்தங்களுடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் வலுவான வேலைத்திட்டத்தின் காரணமாக, கடந்த ஒரு வருடத்தில் நாட்டில் பணவீக்கம் 62.1% சதவீதத்தினால் குறைந்துள்ளதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் 66.7% ஆக இருந்த பணவீக்கம், 2023ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 4.6% வரை, குறைக்க முடிந்துள்ளதாக பதில் நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடக சந்திப்பில் பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

1.8 பில்லியன் டொலர்களாக இருந்த நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை, கடந்த ஓராண்டில், 3.8 பில்லியன் டொலர்களாக உயர்த்த அரசாங்கத்துக்கு முடிந்துள்ளது.

2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில், ஒரு டொலருக்கு நாம் 361 ரூபா செலுத்தினோம். ஆனால் இந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் ஒரு டொலரை 321 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முடியும். இது செயற்கையான கட்டுப்பாடு இல்லை. ஆனால் டொலருக்கான கேள்வி - தேவைக்கு ஏற்ப உறுதியாக ரூபாவின் பெறுமதியை மிதக்க வைத்து, இந்த நிலைக்கு வரமுடிந்தமை பொருளாதார ரீதியாக மிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும்.

2022 இல் 14% ஆக இருந்த வங்கி வைப்பு வட்டி விகிதம் தற்போது 11% ஆகக் குறைந்துள்ளதுடன், 15.5% ஆக இருந்த கடன் வட்டி விகிதத்தை, இந்த ஆண்டு 12% வரை குறைக்க முடிந்துள்ளது. கடந்த ஆண்டு முதன்மைக் கணக்குப் பற்றாக்குறை - 247 பில்லியன் ரூபாவாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு + 27 பில்லியன் ரூபாவாக அதனை அதிகரிக்க முடிந்துள்ளது. 40 ஆண்டுகளுக்குப் பிறகு, முதன்மைக் கணக்கு இருப்பு மேலதிகமாக இருப்பதையும் இங்கு கூற வேண்டும்.

2022இல் 496,430 ஆக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை, இந்த ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில் 904,318 ஆக அதிகரித்துள்ளது.

2022ஆம் ஆண்டில் சுற்றுலா வருமானம் 832.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன், அது, இந்த ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில் 1,304.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது, 56.7% வளர்ச்சியைக் காட்டுகிறது.

மேலும், கடந்த வருடம் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் இலங்கைக்கு அனுப்பிய பணத்தின் அளவு 2,214.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அது இந்த வருடம் 3862.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மாறியுள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 74.4% அதிகரிப்பு என நிதியமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

பணப் பரிமாற்றப் பற்றாக்குறை (Exchange deficit) காரணமாக எரிபொருளின் கேள்வியைக் கட்டுப்படுத்த, QR குறியீடு முறை 2022 ஓகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, சாதாரண கேள்விக்கும் விநியோகத்துக்கும் இடையே பாரிய இடைவெளி ஏற்பட்டது. 2023 ஜூன் மாதத்தில், QR முறை சிறிது தளர்த்தப்பட்டபோது, டீசல் நுகர்வு 28% ஆகவும், பெற்றோல் நுகர்வு 83% ஆகவும் அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியை நேரடியாகப் பாதிக்கும் எரிபொருள் விநியோகத்துக்காக விதிக்கப்பட்ட QR குறியீடு முறை செப்டெம்பர் 01ஆம் திகதி முதல் முழுமையாக நீக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்றபோது 14 மணிநேர மின்வெட்டு காணப்பட்டது. இது நேரடியாக பொருளாதாரத்தைப் பாதிக்கும் ஒரு விடயம். தற்போதைய அரசாங்கத்தினால் மக்களுக்கு தொடர்ந்து மின்சாரம் வழங்க முடிந்துள்ளது.

அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால், 2023 ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி, 1,467 வகையான இறக்குமதிப் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்பட்டன. தற்போது 279 பொருட்களுக்கு மாத்திரமே தடை அமுலில் உள்ளது. 2020ஆம் ஆண்டில், வாகனங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டது. ஆனால் இப்போது பொதுப் போக்குவரத்துக்குத் தேவையான பஸ்கள் மற்றும் பாரவூர்திகளை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் மாதமாகும்போது, நாம் கடனை அடைக்க முடியாத நாடாக மாறிவிட்டோம். சர்வதேச நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் நாம் இப்போது முதல் தவணையைப் பெற்றுள்ளோம். இவ்வாறு முழுமையாக, இந்த நாட்டின் பொருளாதாரத்தை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ஸ்தீரனமான நிலைக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கத்தினால் முடிந்துள்ளது" என்றார்.

# அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியக்காரர்களுக்கு 2024 இல் சம்பளம், கொடுப்பனவுகள் வழங்கும் திகதிகள்

2024 වර්ෂයේ වැටුප් අත්තිකාරම්, වැටුප් හා විශ්‍රාම වැටුප් ගෙවීමට නියමිත දිනයන්

2024 ஆம் ஆண்டில் சம்பள முற்பணம், சம்பளம், ஓய்வூதியம் வழங்குவதற்கான திகதிகள்

Scheduled dates for payment of Salary advances, Salaries and Pensions for the year 2024

| මාසය / மாதம் / Month | රජයේ නිලධාරීන් /அரசாங்க உத்தியோகத்தர்கள் / Government Servants | | ත්‍රිවිධ හමුදා இராணுவ முப்படை Armed Forces | ගුරු සේවය ஆசிரியர் சேவை Teacher's Service | විශ්‍රාම වැටුප් ஓய்வூதியம் Pension Payments |
|---|---|---|---|---|---|
| | වැටුප් අත්තිකාරම් சம்பள முற்பணம்/ Salary Advance | වැටුප් சம்பளம் /Salary | වැටුප් / சம்பளம்/ Salary | වැටුප් /சம்பளம்/ Salary | |
| ජනවාරි / தை / January | 10 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 24 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 19 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 18 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday | 10 බදාදා/ புதன்கிழமை / Wednesday |
| පෙබරවාරි / மாசி / February | 9 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 22 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday | 19 සඳුදා / திங்கட்கிழமை /Monday | 16 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 9 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday |
| මාර්තු / பங்குனி / March | 7 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday | 25 සඳුදා / திங்கட்கிழமை /Monday | 20 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 19 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 7 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday |
| අප්‍රේල්/ சித்திரை / April | | 10 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 10 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 10 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 8 සඳුදා / திங்கட்கிழமை /Monday |
| මැයි/ வைகாசி / May | 10 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 22 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 17 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 16 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday | 10 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday |
| ජූනි/ ஆனி / June | 10 සඳුදා / திங்கட்கிழமை /Monday | 25 අඟහරුවාදා /செவ்வாய்க்கிழமை /Tuesday | 19 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 18 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 10 සඳුදා / திங்கட்கிழமை /Monday |
| ජූලි / ஆடி / July | 10 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 25 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday | 22 සඳුදා / திங்கட்கிழமை / Monday | 19 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 10 බදාදා/ புதன்கிழமை / Wednesday |
| අගෝස්තු / ஆவணி / August | 09 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 23 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 20අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 16 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 9 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday |
| සැප්තැම්බර් / புரட்டாதி / September | 10 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 25 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 20 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 19 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday | 10 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday |
| ඔක්තෝබර්/ ஐப்பசி / October | 10 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday | 25 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 22 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 21 සඳුදා / திங்கட்கிழமை / Monday | 10 බ්‍රහස්පතින්දා / வியாழக்கிழமை / Thursday |
| නොවැම්බර්/ கார்த்திகை / November | 8 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday | 25 සඳුදා / திங்கட்கிழமை / Monday | 20 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 19 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 8 සිකුරාදා / வெள்ளிக்கிழமை / Friday |
| දෙසැම්බර් / மார்கழி / December | 10 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 23 සඳුදා / திங்கட்கிழமை /Monday | 18 බදාදා/ புதன்கிழமை / Wednesday | 17 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday | 10 අඟහරුවාදා / செவ்வாய்க்கிழமை /Tuesday |

එච්.ඩී.එල්. සිල්වා
භාණ්ඩාගාර මෙහෙයුම් අධ්‍යක්ෂ ජනරාල්
2023 සැප්තැම්බර් මස 01 දින

එච්. ඩී. එල්. සිල්වා
අධ්‍යක්ෂ ජනරාල්
භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
මහා භාණ්ඩාගාරය,
කොළඹ - 01.

அரசாங்க ஊழியர்களுக்கான 2024ஆம் ஆண்டில் சம்பள முற்பணம், சம்பளம் மற்றும் ஓய்வூதியம் செலுத்துவதற்கான திகதிகளை அறிவிக்கும் சுற்றறிக்கையை நிதி அமைச்சின் சம்பள நடவடிக்கைப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அதன்படி, 2024ஆம் ஆண்டில், அரசாங்கத் துறை சார்ந்தோரின் சம்பள முற்பணம் மற்றும் சம்பளம் செலுத்தும் திகதிகள், முப்படை மற்றும் ஆசிரியர் சேவை சம்பளம் செலுத்தும் திகதிகள், ஓய்வூதியம் செலுத்தும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பான முழுமையான அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

## திலீபன்...

சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டமா அதிபர் திணைக்கள பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்று, நேற்று கொழும்பிலிருந்து உலங்கு வானூர்தியில் சென்று, யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் அவசர மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இதில், தியாகி திலீபன் நினைவுநாள் அனுஷ்டிப்பு வன்முறை வடிவம் எடுப்பதால், அவசரமாக நினைவுநாளுக்கு தடைவிதிக்க வேண்டுமென கோரிக்கை வைத்தனர்.

அத்துடன், நேற்று வவுனியா பம்பைமடுவில், சிவில் உடையில் வந்து வீடியோ படம் பிடித்த புலனாய்வாளர்களின் கைத்தொலைபேசி பறிக்கப்பட்டு, காட்சிகள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வீடியோவை நீதிபதிக்கு திரையிட்டு காண்பித்துள்ளனர்.

நினைவுநாள் அனுஷ்டிப்பு வன்முறை வடிவமெடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துக்கு எதற்காக நினைவுநாளை தடைவிதிக்க வேண்டும், பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா என நீதிபதி வினவியபோது, பொலிஸ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வன்முறை பரவலை தடுக்க நினைவு நாள் அனுஷ்டிப்பை தடை செய்ய வேண்டுமெனவும் கோரினர்.

இந்த மனு தொடர்பில் இன்று மதியம் 1.30 மணிக்கு கட்டளை பிறப்பிப்பதாக நீதிமன்றம் அறிவித்தது.

**பம்பைமடுவில் நடந்தது என்ன?**

வவுனியா பம்பைமடுவில் நேற்றுமுன்தினம் திலீபன் ஊர்தி பயணித்தது. பம்மைமடு பல்கலைக்கழகத்தில் அஞ்சலி நிகழ்வு நடந்தது. மாணவர்கள் அஞ்சலி செலுத்திய போது, சிவில் உடையில் வந்த புலனாய்வாளர்கள் அதை காணொளியாக பதிவு செய்தனர்.

புலனாய்வாளர்கள் காணொளி பதிவு செய்ததால் மாணவர்களுக்கிடையே சலசலப்பு உருவானது.

இதையடுத்து, சம்பவ இடத்திலிருந்த சட்டத்தரணி ந.காண்டீபன், அந்த நபர்களிடம் சென்று, அவர்கள் யார் என வினவியுள்ளார். தாம் ஊடகத்தை சேர்ந்தவர்கள் என அந்த நபர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊடக அடையாள அட்டையை காண்பிக்குமாறு காண்டீபன் கேட்டார். பின்னர் ஒருவர் பொலிஸ் அடையாள அட்டையை காண்பித்துள்ளார். அவரிடமிருந்த காணொளிகளை அழிக்குமாறு முன்னணியினர் வற்புறுத்தியுள்ளனர். அவர் காணொளிகளை அழிப்பதாக குறிப்பிட்டுள்ளார். எனினும், அழிக்கவில்லை.

இதையடுத்து, முன்னணியினர் அவரது தொலைபேசியை கைப்பற்றி காணொளியை அழித்துள்ளனர்.

தனது கையடக்க தொலைபேசியை பலவந்தமாக பறித்து, காணொளி அழிக்கப்பட்டதாக அந்த சிவில் உடை புலனாய்வாளர் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார். அந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே, நேற்று யாழ்ப்பாணத்தில் திலீபன் நினைவுக்கு தடைகோரப்பட்டுள்ளது.

## சர்வதேச...

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆரம்பமான விவாதத்தில் எதிர்க்கட்சி எம்.பி. நிரோஷன் பெரேரா தெரிவித்த விடயங்களை மறுதலித்து கருத்து வெளியிட்ட சந்திரகாந்தன், போலியான குற்றச்சாட்டுகளை சுமத்தவேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் நேற்று பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா முன்வைத்து உரையாற்றியிருந்தார்.

இதன்போது கருத்துரைத்த அவர், 2019ஆம் ஆண்டு பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இதுவரை அதனுடன் தொடர்புடையவர்கள் இன்னும் கைது செய்யப்படாதுள்ளமை கவலையளிப்பதாக குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில், ஆராய்வதற்கு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும், அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சிலர் தடையாக இருந்துள்ளனர். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு அப்பாவி பொதுமக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி உள்ளிட்ட பலர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே, ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட அனைத்து சர்வதேச அமைப்புகளின் கண்காணிப்பில் இந்த தாக்குதல் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அதன்போதே குறுக்கிட்ட இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தாம் சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

## உள்ளூராட்சி...

(21) நடைபெற்ற அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரதமரும் அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் ஏகமனதாக உடன்பாடு எட்டப்பட்டது.

## 2023 உயர்தரப்...

பரீட்சையை நடத்துவதற்கான தினத்தை ஒத்திவைப்பது தொடர்பான தீர்மானம் அடுத்த வாரம் பரீட்சைகள் திணைக்களத்தினால் முன்வைக்கப்படும் என்றும் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதற்கமைய, திருத்தப்பட்ட திகதிகள் அடுத்தவாரம் முறையாக அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கோரிக்கைக்கமைய பரீட்சையை ஒத்திவைத்தால், 2024 ஜனவரி மாதம் வரை ஒத்திவைக்க நேரிடும் என்றும் அவ்வாறு ஒத்திவைத்தால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் மாத்திரமின்றி அவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகளும் இல்லாமல் போகக்கூடும் எனறும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஈஸ்டர் தாக்குதலுக்கு...

கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காகவே ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள காணொளியில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நான்கு வருடங்களுக்கு மேலாகியும் ஈஸ்டர் தாக்குதலுக்கு நேரடியாகப் பொறுப்பான தரப்பினரை அடையாளம் காணவும் தாக்குதலின் நோக்கத்தை வெளிப்படுத்தவும் அரசாங்கம் தவறிவிட்டது.

தொடர் தாக்குதல்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட பாதுகாப்புப் படைகளில் தொடர்ந்தும் பதவியில் இருப்பவர்கள் தற்காலிகமாக பதவியில் இருந்து நீக்கப்பட்டு பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென நிரோஷன் பெரேரா மேலும் தெரிவித்தார்.

## தமிழ் எம்.பிக்கள்...

எனினும், இந்த விடயம் தொடர்பில் அதிர்ஷ்டவசமாக பொலிஸார் பலரை கைதுசெய்துள்ளனர். இந்த குற்றங்களுக்கு காரணமானவர்கள் சட்டத்தின் கீழ் பொறுப்புக் கூறச் செய்யப்படவேண்டும் எனவும் செனட்குழு தெரிவித்துள்ளது.

## நாட்டை தெருவுக்கு...

கருத்து வெளியிடும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில், மக்களின் வாழ்வாதாரம், வியாபார நடவடிக்கைகள் சீரழிந்துள்ள இவ்வேளையில், நாட்டை வங்குரோத்தடையச் செய்ய உறுதுணையாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தொடருக்குச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரச அதிகாரிகளை அழைத்துச் சென்றாலும் நாடு வங்குரோத்தாகுவதற்கு காரணமானவர்களை அழைத்துச் செல்வது பொதுமக்களின் பணத்தை வீணடிக்கும் செயல். நாட்டு மக்களின் வரிப்பணத்தை மொட்டு எம்.பிக்களை திருப்திப்படுத்துவதற்கு பயன்படுத்துவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தியாவசிய அதிகாரிகளை அழைத்துச் சென்றாலும் பரவாயில்லை. நாட்டை வங்குரோத்தாக்கிய நண்பர்கள் குழுவை அழைத்து சென்றுள்ளார். அந்தக் குழுவை மகிழ்விப்பதற்காக இப்படிச் செய்கிறார்கள். மக்களின் வரிப்பணத்தை இப்படி வீணாக்காதீர்கள்'' என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## தனுஷ்கவின்...

கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று முடிவுக்கு வந்தநிலையில் நீதிபதி தனது தீர்ப்பை அடுத்த வியாழக்கிழமை அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் வீரரான தனுஷ்க குணதிலக்க கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ரி20 உலகக்கிண்ண தொடரில் ஆடுவதற்காக சென்ற வேளையில் அந்நாட்டு பெண்ணுடன் பாலியல் பலாத்கார சர்ச்சையில் சிக்கினார் என்பதுடன் அவர் இதுவரையில் அவுஸ்திரேலியாவிலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அது தொடர்பிலான வழக்கு விசாரணையின் நேற்றைய நான்காம் நாள் விசாரணையின்போது குறிப்பிட்ட பெண் எதிர்பார்த்ததை விட தனுஷ்கவுடனான பாலியல் உறவு வித்தியாசமாக அமைந்தது என அரச சட்டத்தரணி கப்பிரியலீ ஸ்டீட்மென் தெரிவித்தார். மேலும் அந்த பெண்ணின் வேண்டுகோள்களை மதிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

குற்றம்சாட்டியுள்ள பெண்ணை பிரிஸ்பேர்னிற்கு வருமாறு தனுஷ்க குணதிலக அழைத்தார். தான் அதற்கான செலவை பொறுப்பேற்பதாக அவர் தெரிவித்தார். அதனை அந்த பெண் நிராகரித்துவிட்டார் என குறிப்பிட்டுள்ள அரச வழக்கறிஞர், இருவருக்கும் இடையிலான உறவு பரஸ்பர சம்மதத்துடன் இடம்பெற்றது தெளிவாகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்புக்கு முன்னர் குற்றம்சாட்டப்பட்டவர் அந்த பெண்ணை இடைவிடாது முயற்சி செய்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

படுக்கையறையில் தனக்கு ஆணுறை பயன்படுத்துவது பிடிக்காது என தெரிவித்த தனுஷ்க, அதுதொடர்பில் அந்த பெண்ணுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார் எனவும் அரசதரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அந்த பெண்ணை திருப்திப்படுத்துவதற்காக அவர் ஆணுறையை அணிய இணங்கினார். அதனை அகற்றுவதற்கு அவருக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன எனவும் அரசதரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## சரத் – மைத்ரி...

பாராளுமன்றக் குழுவில் கேள்வி எழுப்பினேன். அவர் என்ன சொன்னார்? இலங்கை திரும்ப விமானத்தில் இருக்கைகள் இருந்திருக்கவில்லை என்று கூறினார். பொய் சொல்லிவிட்டு இரவில் எல்லோரும் தூங்கிய பின்னர் நாட்டுக்கு வந்தார். இப்படி ஒரு கோழைத் தலைவன் இதுவரை பிறந்ததில்லை. அதற்காக நாங்கள் மிகவும் வெட்கப்படுகிறோம்.

(மைத்ரி இதற்கு இடையூறு செய்ய முயல்கிறார்)

**மைத்ரி:**

சலே எங்கே இருந்தார்? திருப்பதி எங்கே? நான் திருப்பதிக்கு நிறைய தடவைகள் போயிருக்கிறேன், சலேவை சந்தித்ததில்லை. நான் இந்தியாவில் எங்கே இருக்கிறேன் என்று கூட சலேவுக்குத் தெரியாது. இவர் பொய் சொல்கிறார். அவர் இராணுவத்தில் இருந்தபோது, இராணுவ முகாம் தாக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

**பொன்சேகா:**

இந்த பைத்தியக்காரன் தினமும் இந்த கதையை சொல்கிறார். பாதுகாவலரின் பொறுப்பில் இருப்பவர் இராணுவத் தளபதி அல்ல. இப்போது இவர் வாலை மிதித்துக்கொண்டு கதறுகிறார். முன்னாள் ஜனாதிபதியொருவர் இப்படி நடந்து கொள்வாரா? பின்வரிசை எம்.பி. போல் நடந்து கொள்கிறார். முட்டாளைப் போல் கத்துகிறார். பிரதான சூத்திரதாரி என்பதால்தான் இந்த அலறல். நாங்கள் ஒருபோதும் படுக்கைக்கு அடியில் ஒளிந்து கொண்டவர்கள் அல்ல. பொது வேட்பாளர்களுக்கும் ஒரு அவமானம். 2015இல் நாங்கள் அந்த முட்டாள்தனத்தையும் செய்தோம். அதற்காக நாங்கள் இப்போது வெட்கப்படுகிறோம்.

**மைத்ரி:**

அவர் பொய் சொல்கிறார். அவரது இராணுவத் தளபதியின் காலத்தில், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இறந்தனர். அவர் அதைப் பற்றி பேசுவதில்லை. இராணுவத் தலைமையகத்தைப் பாதுகாக்க முடியாத இராணுவத் தளபதி அவர். குடல்கள் வெளியே வர வெடிகுண்டு வெடித்தது . குடல்கள் ஒரு வாகனத்திலும் அவரை வேறு வாகனத்திலும் ஏற்றிச் சென்றனர். இப்போது தேசிய பாதுகாப்பு பற்றி பேசுகிறார். ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு முற்றிலும் பக்கச்சார்பானது.

**பொன்சேகா:**

நான் இராணுவத் தளபதியாக இருந்தபோது ஐயாயிரம் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். ஆயிரமோ இரண்டாயிரமோ அல்ல. 25 ஆயிரம் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். போர்அப்படிதான் வெற்றி பெற்றது. அர்ப்பணிப்புகளை செய்யாமல் போரை வெல்ல முடியாது. படுக்கைக்கு அடியில் இருந்து போரை வெல்ல முடியாது.

எவ்வாறாயினும், பொன்சேகா தொடர்ந்தும் கடுந்தொனியில் மைத்ரியை எதிர்த்ததால் சபையில் பரபரப்பு ஏற்பட்டது.

## மைத்ரியின்...

குறித்த கடிதம் தொடர்பில் தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த முறைப்பாட்டை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான, இந்த தடை உத்தரவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிவரை அமுல்படுத்துமாறு உத்தரவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதியினால் கடந்த 18ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக முன்னாள் பொதுச் செயலாளர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். சுதந்திரக் கட்சியின் யாப்பின் பிரகாரம் அவ்வாறான காரணங்களைக் கூறி கடிதம் அனுப்ப கட்சியின் தலைவருக்கு அதிகாரம் இல்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கஜேந்திரன் எம்.பி...

திலீபனின் உருவச் சிலையை கொண்டு வரும்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட 14 பேர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்நிலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட ஆறு பேரையும் கடந்த 18ஆம் திகதி சீனக்குடா பொலிஸார் கைது செய்து திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது நேற்று 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதேநேரம் குறித்த வழக்கு திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர்வரும் ஒக்டோபர் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டார்.

ஆனால், நேற்று மாலை பொலிஸார் விசேட சமர்ப்பணம் ஒன்றை முன்வைத்து விடுத்த கோரிக்கைக்கமைய சந்தேகநபர்களை தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்ய நீதவான் உத்தரவிட்டார். சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டால் அங்கு இனமுறுகல் ஏற்படலாமென பொலிஸ் தரப்பில் மன்றுக்கு அறிவிக்கப்பட்டதாக அறியமுடிந்தது.

## இலவச சுகாதார சேவையை முடக்காதீர்!

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





சாவகச்சேரி நிருபர்

'வைத்தியர்களை வெளியேற நிர்ப்பந்தித்து இலவச சுகாதார சேவையை முடக்கும் சதியை முறியடிப்போம்' என்ற தொனிப்பொருளில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று (21) மதியம் வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது "தரம் குறைந்த மருந்துகளை வழங்காதே, இலவச வைத்திய சேவையை முடக்காதே, நெருப்பு விலை மருத்துவ உபகரணங்கள் வேண்டாம்" என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

பிற்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரை குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் வைத்திய அதிகாரிகள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உற்பத்திச் செலவு – பொருள் ஏற்றுமதியிலுள்ள தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்க்க பொறிமுறையொன்று அவசியம்

## சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு வலியுறுத்து





உற்பத்திச் செலவு மற்றும் பல்வேறு பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்க்க பொறிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு வலிறுயுத்தியுள்ளது.

மேலும், இலங்கைக்கு ஐரோப்பிய சங்கத்துடன் மேலதிக வர்த்தக நிலுவை உள்ளதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள், ஜிஎஸ்பி பிளஸ், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க பிராந்தியங்களுடனான வர்த்தகத் தொடர்புகளின் தற்போதைய நிலை பற்றிய குழுவில் விடயங்களை முன்வைத்ததுடன், இது தொடர்பில் குழுவில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு கூடியபோதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதில் இளைஞர் பிரதிநிதிகள் சிலருக்கும் சிக்கல்கள் மற்றும் முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு குழுவால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இலங்கை காரீயம் உள்ளிட்ட ஏனைய கனிய வளங்கள் கொண்ட நாடாக இருந்தாலும், அந்தக் கனிய வளங்களை பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளாக ஏற்றுமதி செய்வதில் குறைந்த அளவிலான செயல்திறன் கொண்டிருப்பதாகக் குழுவில் பங்கேற்ற இளைஞர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

போகல காரீய சுரங்கம், கஹட்டகஹ சுரங்கம், ராகெதர சுரங்கம் மற்றும் ஏனைய சுரங்கங்கள் இலங்கையில் இருந்தாலும் அவற்றில் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகள் மேற்கொள்ளப்படுவதில்லையென இதன்போது இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியதுடன், நேரடியான சுரங்க அகழ்வு மற்றும் ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்ட சந்தையொன்று மாத்திரம் காணப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த குழுவின் தலைவர், எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகத்துடன் (SLINTEC) நெருக்கமாக செயற்பட்டு வருவதாகவும், தென் கொரிய மற்றும் ஜப்பானிய தொழில்நுட்ப நிறுவனங்கள் இந்நாட்டில் தமது தொழிற்சாலைகளை நிறுவுவது குறித்து கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்பார்த்த அபிவிருத்திகள் எட்டப்படாவிட்டாலும், சந்தையை உருவாக்குவதற்கு கைத்தொழில்களை இணைத்து இத்துறையை அபிவிருத்திசெய்வதற்கு உரிய அதிகாரிகள் செயற்பட்டு வருவதாகவும் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொடுக்கல் வாங்கல்களை எளிதாக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒற்றை சாளர இயக்க முறைமையின் தற்போதைய நிலை மேலும் சீரமைக்கப்பட வேண்டும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது. இலங்கை முதலீட்டுச் சபை, முதலீட்டாளர் ஒருவருக்கு அனுமதி வழங்க முன்னர் அது சம்பந்தமான பல அனுமதிகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என குழு சுட்டிக்காட்டியதுடன், வகைப்படுத்தலின் பிரகாரம் அனுமதி வழங்கும் செயன்முறை பற்றி கருத்திற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டியது.

அத்துடன், ஒற்றை சாளர இயக்க முறைமை எதிர்பார்க்கப்பட்ட அளவில் வெற்றியடையாமைக்குக் காரணம் அரசாங்கத்தினதோ அதிகாரிகளினதோ திறமையின்மை அல்ல என்றும், சட்டக் கட்டமைப்பில் காணப்படும் சில இடைவெளிகளே என குழு மேலும் சுட்டிக்காட்டியது. அதற்கமைய, சில சட்டங்களை மறுஆய்வு செய்து திருத்தம் செய்யவேண்டும் என்று துறைசார் மேற்பார்வைக் குழுவின் கருத்தாக இருந்தது.

உற்பத்திச் செலவு மற்றும் பல்வேறு பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான தொழில்நுட்பச் சிக்கல்களை தீர்க்க பொறிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென குழு வலியுறுத்தியது.

இது தொடர் பில் கருத்து தெரிவித்த குழுவின் தலைவர், உள்நாட்டு சந்தையில் கூட குறிப்பிட்ட சில பொருட்களுக்கான தேவை காணப்படுகின்ற போதிலும் விநியோகச் சங்கிலியில் தொடர்ச்சியின்மை பாரிய சிக்கலாகும் எனத் தெரிவித்தார். தொடர்ச்சியின்மையால் விலை அதிகரிப்பதாகவும் இதனால் கொள்வனவாளர்கள் இழக்கப்படுவதாகவும் தலைவர் குறிப்பிட்டார். உற்பத்திச் செலவு அதிகரிப்பது சிக்கலானது எனவும், இந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு பொறிமுறையொன்றை அமைப்பது தொடர்பில் கண்டறியுமாறு குழுவால் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களில் காணப்படும் பணியாட்கள் வெற்றிடத்துக்கு நிரந்தரத் தீர்வு வழங்கும் வரை தொண்டு அடிப்படையில் சேவையை வழங்க விரும்புபவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவரால் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு பரிந்துரை வழங்கப்பட்டது.

ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க பிராந்தியங்களுடனான வர்த்தகத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் விரிவான தலையீட்டின் அவசியம் தொடர்பில் விளக்கிய குழு, அதற்குத் தேவையான நடவடிக்கையை தாமதமின்றி எடுக்குமாறு வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி.எல். பீரிஸ், நிரோஷன் பெரேரா, யதாமினி குணவர்தன, மதுர விதானகே ஆகிய குழுவின் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குழுவின் தலைவரின் அனுமதியுடன் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

வெளிவிவகார அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகள் சிலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் இளைஞர் பிரதிநிதிகள் சிலரும் குழுவின் தலைவரின் அழைப்பில் கலந்துகொண்டனர்.

## வவுனியா இரட்டைக் கொலை விவகாரம்:

# ஒருவர் அடையாளம் - மூவருக்கு பகிரங்க பிடியாணை

வவுனியா நிருபர்

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள 6 பேரில் ஒருவர் அடையாள அணிவகுப்பின்போது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தலைமறைவாகியுள்ள மூவருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று (21) பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் உயிரிழந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அத்துடன், எரிகாயங்களுக்குள்ளாகி சிகிச்சைபெற்று வந்த யுவதி ஒருவரை தான் கண்டதாகவும் அவரை அடையாளம் காட்ட முடியும் எனவும் விசாரணையின்போது தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்புக்கு திகதியிடப்பட்டிருந்தது. குறித்த சம்பவத்தில் எரிகாயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த யுவதி, நேற்று (21) இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின்போது தாக்குதலில் ஈடுபட்ட ஒருவரை அடையாளம் காட்டியுள்ளார்.

மேலும், மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களை கைதுசெய்ய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். குறித்த மூவரும் தலைமறைவாகவுள்ளதால் அவர்களை கைதுசெய்ய பகிரங்க பிடியாணை உத்தரவு வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், வழக்கு விசாரணை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

மேஷம்: கடின உழைப்பால் உடல் அசதி, ஏதோ பயணத்தினால் மனம் தடுமாறிக்கொண்டிருக்கும்.

ரிஷபம்: உடல், மனம் சோம்பிக் காணப்படும், அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

மிதுனம்: விவாகப் பேச்சுகளால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும். கடல் தாண்டிய பயணத்தால் நன்மை உண்டு.

கடகம்: நீண்டநாள் நோயிலிருந்து விடுதலை, சத்துருக்களால் தன லாபங்கள் உண்டு.

சிம்மம்: தொழில் ரீதியான நட்டங்கள் ஏற்படும், குழந்தைகளால் செலவுகள் ஏற்படும்.

கன்னி: யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள், எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம்.

துலாம்: உங்களுக்கான நகை. உடைகளை வாங்குவீர்கள். துணிவோடு நடைபோடுவீர்கள்.

விருச்சிகம்: கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள். மன தைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படும்.

தனுசு: மன தைரியத்துடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

மகரம்: குடும்ப உறவுகளுடன் கவனமாக நடந்துகொள்ளுங்கள். தேவையற்றவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டாம்.

கும்பம்: உங்கள் காதலியுடன் உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள், தொழில், வியாபார லாபம் உண்டு.

மீனம்: நீங்கள் எதிர்பார்த்த தொழில் அமையும், குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**திதி:** சப்தமி பி.ப.1.35 வரை பின் அஷ்டமி
**நட்சத்திரம்:** கேட்டை பி.ப.3.34 வரை பின் மூலம்
**யோகம் :** மரண யோகம் பி.ப.3.34 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப. 6.00 - 7.00 மணி வரை
**ராகு காலம்:** 10.30 – 12.00 மணி வரை
**எமகண்டம் :** 3.00 - 4.30 மணி வரை
**குளிகை:** 7.30 - 9.00 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மேஷ - இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** பூசம், அனுஷம், உத்தரட்டாதி ஆயிலியம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** --------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## கொழும்பில் நாளை நீர்வெட்டு

**கொழும்பின் பல பகுதிகளில் நாளை (23) மாலை 6.00 மணிமுதல் செப்டெம்பர் 24 காலை 6.00 மணிவரையான 12 மணிநேர நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.**

**அதன்படி கொழும்பு 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளிலேயே நீர் விநியோகம் தடைப்படவுள்ள நிலையில், அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் காரணமாக இந்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.**

**இதனால் உண்டாகும் சிரமத்துக்கு வருந்துவதாகவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.**

# அணுஆயுதங்களை தடை செய்வதற்கான ஒப்பந்தத்தில் இணைவதற்கான ஆவணம் கையளிப்பு

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடரையொட்டி, அண்மையில் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற உயர்மட்ட விழாவில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி அணு ஆயுதங்களை தடைசெய்வதற்கான ஒப்பந்தத்தில் இணைவதற்கான ஆவணத்தைக் கையளித்தார். இதன்படி, இந்த ஒப்பந்தத்தில் இலங்கை 69ஆவது அரச தரப்பாகும்.

2017 ஜூலை 07ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் அணுஆயுதங்களை தடைசெய்வதற்கான ஒப்பந்தத்தின் பேச்சுவார்த்தைகளில் இலங்கை பங்கேற்றதுடன், அதை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவாக வாக்களித்த 122 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். 2016ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற திறந்த நிலைப் பணிக்குழு செயன்முறையில் பங்கேற்று இலங்கையும் பங்களிப்புச் செய்ததுடன், இது ஒப்பந்தப் பேச்சுவார்த்தை செயன்முறைக்கு வழிவகுத்தது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்த தீர்மானத்துக்கு ஆதரவாக தொடர்ச்சியாக வாக்களிப்பதன் மூலம் அனைத்து அரசுகளையும் சாத்தியமான - விரைவான திகதியில் ஒப்பந்தத்தில் இணைய அழைப்பு விடுக்கும் இந்த ஒப்பந்தம் உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படுவதை இலங்கை ஊக்குவித்துள்ளது.

50 ஒப்புதல்களைப் பெற்ற பின்னர், இது 2021 ஜனவரி 22 முதல் நடைமுறைக்கு வந்தது.

அணுஆயுதங்களைத் தடைசெய்வதற்கான ஒப்பந்தம் அணுஆயுதங்கள் அல்லது ஏனைய அணு சார்ந்த வெடிக்கும் சாதனங்களை உருவாக்குதல், சோதனை செய்தல், தயாரித்தல், உற்பத்திசெய்தல், கையகப்படுத்துதல், வைத்திருத்தல் அல்லது சேமித்து வைப்பதை விட்டும் உறுப்புநாடுகளைத் தடைசெய்கின்றது.



அணுஆயுதங்களை தடைசெய்வதற்கான உடன்படிக்கையை இலங்கை அங்கீகரிப்பதானது, சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கு ஆதரவாக அணுஆயுதக் குறைப்புக்கான தனது நீண்டகால உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. இந்தச் சூழலில், இலங்கையும் 2023 ஜூலை 25ஆம் திகதி விரிவான அணுசக்தி பரிசோதனை தடை ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளது.

ஐ.நாவின் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் ஆயுதக் குறைப்பு விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி திருமதி இசுமி நகாமிட்சு, வெளிவிவகார செயலாளர் திருமதி அருணி விஜேவர்தன, நியூயோர்க்கிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் மற்றும் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், நியூயோர்க்கிலுள்ள இலங்கையின் நிரந்தரத் தூதரகம் மற்றும் ஐ.நா. சட்ட விவகார அலுவலகம் ஆகியன இந்த நிகழ்வில் கலந்துகொண்டன.

# வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் ஏழாம் நாள் திருவிழா!



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் வருடாந்த உற்சவத்தின் ஏழாம் நாள் திருவிழா நேற்று முன்தினம் (20) வசந்த மண்டப பூசைகளுடன் ஆரம்பமானது. இந்நிலையில், ஆறுநாட்கள் உள்வீதி வலம் வந்த வல்லிபுர ஆழ்வார் நேற்று (21) வெளிவீதி வந்தார்.

ஆலய பிரதம குரு கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற திருவிழாவில் வடமராட்சி இளைஞர்களால் பாரம்பரிய மரபுக் கலையான சிலம்பம் மற்றும் தீப்பந்த சிலம்பம் இடம்பெற்றன.

நேற்றைய திருவிழாவில் வடமராட்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியார்கள் கலந்துகொண்டனர்.

# அவிசாவளை துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழப்பு

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல தல்துவ, குருபஸ்கொட வளைவுக்கு அருகில் முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நால்வரின் மீது நேற்று முன்தினம் (20) இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் 119 என்ற அவசர இழைப்பு இலக்கத்துக்கு இந்தத் தகவல் கிடைக்கப்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸாரால் எடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவிசாவளையிலிருந்து கேகாலைக்கு செல்லும் திசையில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டியின்மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரர்கள் இருவரால் டி – 56 ரக துப்பாக்கியால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயங்களுக்குள்ளான நால்வரும் அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தல்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 மற்றும் 36 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். மேலும், தல்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 மற்றும் 43 வயதுடைய இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்புடைய நபர்கள் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**தமிழன்**
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 செப்டெம்பர் 22ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# தற்கொலைகளை தடுப்போம்!

அண்மைக்காலமாக தற்கொலை சம்பந்தமான செய்திகள் அடிக்கடி வந்தவண்ணமுள்ளன.

குறிப்பாக, நகர்ப்புறங்களில் கல்வி கற்ற சமூகத்தில் இவ்வாறன துன்பியல் சம்பவங்கள் நடப்பது அதிர்ச்சியைத் தருகிறது.

இவ்வாறான செய்திகளை அணுகும்போது தற்கொலை செய்துகொண்டவரோடு நேரடித்தொடர்பு இல்லாவிட்டாலும், குற்ற உணர்வுக்கு ஆட்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.நுணுக்கமாகப் பார்த்தால் குற்றமே புரியாமல் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரின் ஆழ்மனதில் குற்ற உணர்வு மேலெழும். பெற்றோர் குற்ற உணர்வுக்கு ஆளாகாமல் மீள்வது கடினம். நாம் முறையாகக் கவனிக்கத் தவறினோமா, வேண்டியதைச் சரியாகச் செய்யாமல் விட்டுவிட்டோமா எனப் பல கேள்விகள் அவர்களைத் துளைத்தெடுக்கும். ஒரு கட்டத்தில் மன அழுத்தத்தில் தள்ளும்.

கடினமான இந்தக் காலகட்டத்தைக் கடந்து வருவதற்கு உறவினர்களும் நண்பர்களும் உடனிருந்து அவர்களுக்கு உதவ வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் மனநல மருத்துவரை அணுகுவதற்குத் தயங்கக் கூடாது.

அதேபோல், சம்பந்தப்பட்டவர்கள் படித்த பாடசாலைகளில், கல்விக்கூடங்களில் அவர்களுடன் பழகிய சக மாணவ-மாணவியர், நண்பர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் சில உதவிகள் தேவைப்படும். அவர்கள் அனைவரும் இத்தருணத்தில் கவனமாக இருக்கவேண்டும்.ஒருவர் தற்கொலை செய்துகொண்டால் உடனிருப்பவர்களும் தற்கொலை செய்துகொள்வார்கள் என்ற அர்த்தம் கிடையாது. அதேநேரம், இந்தப் பருவத்தில் தனிநபருக்கு இருக்கும் மன அழுத்தம் அவரைச் சார்ந்தவர்களையும் பாதிக்கக்கூடும். ஒவ்வொருவரும் அதை எப்படிக் கையாள்வார்கள் என்பது எவருக்கும் தெரியாது.

இதுவரை கவனிக்காமல் விட்ட பெற்றோர்கள், சிறிது நேரம் ஒதுக்கிக் கூர்ந்து கவனித்தால் மன அழுத்தப் பிரச்சினைகளை எளிதில் முடிவுக்குக் கொண்டுவரலாம். பிரபலங்களோ அவர்களைச் சார்ந்தவர்களோ தற்கொலை செய்துகொள்ளும்போது, அவர் சார்ந்த சமூகத்துக்கும் ஒருவித மன அழுத்தம் ஏற்படும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் தற்கொலை நிகழ்வுகள் நடந்தால் அதை ஒரு செய்தியாகக் கடந்துபோகாமல் சக மனிதர்களை ஆற்றுப்படுத்தும் பணியையும் உடனடியாகத் தொடங்கிவிடுவார்கள். குடும்பத்தினர், பாடசாலை, கல்லூரியில் பயிலும் சக மாணவ-மாணவியர் என அனைவருக்கும் நேரில்/தொலைபேசி மூலம் ஆலோசனை வழங்குவார்கள்.

எந்தவொரு பிரச்சினைக்கும் தற்கொலை தீர்வல்ல என்பதை வலியுறுத்தும் விதமாக ஆலோசனைகளை வழங்குவார்கள். பிரச்சினைகளுக்கான காரணங்களை அலசி ஆராய்ந்து, எளிய தீர்வுகளை முன்வைப்பார்கள். அதேநேரம், தற்கொலை செய்துகொள்பவர்கள் 'கோழைகள்' என்பது போன்ற கடினமான சொற்களை மறந்தும் பயன்படுத்த மாட்டார்கள்.

மன அழுத்தம் என்பது மரணத்துக்குப் பிறகு சிந்திக்க வேண்டிய விஷயம் அல்ல; வாழும்போதே மன அழுத்தம் இல்லாமல் வாழப்பழகவேண்டும். அதற்கான வழிகள் ஏராளமாக உள்ளன. அவற்றைத் தேடித் தருவதும் - தெரிந்துகொள்வதும் நம்முடைய கடமை. நம் அன்புக்குரியவர்களுக்காக, நாம் நேசிப்பவர்களுக்காக இதைச் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வர வேண்டும்.

நாற்பது விநாடிகளுக்கு ஒரு தற்கொலை என்ற வேகத்தில் உலகில் தற்கொலைகள் நடக்கின்றன.

தற்கொலை தவிர்ப்பு சம்பந்தமாக உலக சுகாதார ஸ்தாபனம் முதல் தடவையாக வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகெங்கிலுமாக ஒவ்வொரு ஆண்டும் எட்டு இலட்சம் பேர் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள் என்று விவரம் வெளியிட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையில் முக்கால் வாசியளவு வறுமை அதிகமுள்ள நாடுகளில் இருந்து வருகிறது.

குறிப்பாக, கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளில் தற்கொலைகள் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் நடக்கின்றன.

உலகில் நடக்கும் தற்கொலைகளில் மூன்றில் ஒரு பங்கு வடகொரியா, இந்தியா இந்தோனேஷியா, நேபாளம் ஆகிய நாடுகளில் இருந்து வந்துவிடுவதாக இந்த அறிக்கை காட்டுகிறது.விகிதாசார ரீதியில் அதிக தற்கொலை நடக்கும் நாடுகள் என்று பார்க்கையில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. ஒரு இலட்சம் பேருக்கு 28.5 தற்கொலைகள் என்ற விகிதத்தில் இலங்கையில் தற்கொலைகள் நடக்கின்றன. இதில் 11 ஆம் இடத்தில் உள்ள இந்தியாவில் இந்த விகிதம் 21.1ஆக உள்ளது.

15 முதல் 29 வயது வரையிலானோரின் மரணங்களைப் பொறுத்தவரையில் முதல் பெரிய காரணி என்றால் அது தற்கொலைதான் என்றும் அதேநேரம், உலகில் பல இடங்களில் அதிகம் தற்கொலை செய்துகொள்வோர் என்றால் அது 70 வயதுக்கும் மேற்பட்டவர்கள்தான் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

உலக அளவில் பார்க்க தற்கொலை முயற்சியில் ஈடுபடும் பெண்களைக் காட்டிலும் ஆண்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகம் என்றும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. பூச்சிகொல்லி மருந்தைக் குடித்துவிடுவது, தூக்குமாட்டிக்கொள்வது, துப்பாக்கியால் சுட்டுக்கொள்வது, நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை உயரத்தில் இருந்து குதித்துவிடுவது போன்றவை அடிக்கடி பயன்படுத்தப்படும் தற்கொலை வழிமுறைகளாக உள்ளன.

தற்கொலைக்குப் பயன்படக்கூடிய பொருட்களை உதாரணத்துக்கு பூச்சிகொல்லிகள், சில மருந்துவகைகள், துப்பாக்கிகள் போன்றவற்றை நினைத்தமட்டில் எளிதில் பெற முடியாது என்ற நிலையை உருவாக்கினால் தற்கொலைகளையும் தற்கொலை முயற்சிகளையும் குறைப்பதில் ஓரளவுக்கு வெற்றி காண முடியும் என்பதாக செல்வந்த நாடுகளின் அனுபவம் அமைந்துள்ளதென இந்த அறிக்கை கூறுகிறது.

தற்கொலை என்பது ஒரு பெரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினை என வர்ணித்துள்ள இந்த அறிக்கை, இதனை எதிர்த்துப் போராடவும், கட்டுப்படுத்தவும் வேண்டும் எனக் கூறுகிறது. சுகாதார சேவை அமைப்புகள் தற்கொலைத் தவிர்ப்பை முக்கியமாகக் கருதி செயற்பட வேண்டும். ஏனெனில், மனநலப் பாதிப்புகள், மோசமான குடிப்பழக்கம் போன்றவை தற்கொலைகளுக்கு வழிவகுக்கும் விடயங்களாக இருக்கின்றன. உலக நாடுகள் பல தற்கொலைகளைத் தவிர்ப்பது தொடர்பில் பலனளிக்கவல்ல செயற்றிட்டங்களைக் கொண்டிருக்கவில்லை என்றும் இந்த நிலை மாறவேண்டும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது.

தற்கொலைகள் பற்றி செய்தி வெளியிடும்போது அவற்றைப் பார்த்து மற்றவர்களும் அவ்விதமான காரியத்தில் இறங்கக்கூடும் என்ற ஆபத்து உள்ளது என்பதை ஊடகங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் இந்த அறிக்கை எச்சரித்துள்ளது. பிரச்சினைக்கு தற்கொலை தீர்வல்ல. அதற்காக எடுக்கும் முயற்சியில் வாழ்ந்துவிடலாம். 'வாழ்க்கை என்பது வாழ்வதற்கே'.........

## இன்றைய நாளில்...

- 1914 – ஜேர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் இரவு 9.30 மணிக்கு சென்னை துறைமுகத்தையும் மற்றும் நகரப் பகுதிகளையும் குண்டுவீசித் தாக்கியது. மொத்தம் 130 குண்டுகளை அது வீசியது.
- 1965 – இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீர் தொடர்பாக இடம்பெற்ற போர் ஐ. நாவின் போர் நிறுத்த அழைப்பை ஏற்று முடிவுக்கு வந்தது.
- 1995 – நாகர்கோயில் பாடசாலைச் சிறார்களின் படுகொலை: யாழ். நாகர்கோயில் பாடசாலை மீது இலங்கை விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சில் 34 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 2014 – நாசாவின் மாவென் விண்கலம் செவ்வாய்க்கோளின் சுற்றுவட்டத்தை அடைந்தது.



# முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஊதுபத்தி: அதன் வாசம் வீசிக்கொண்டேயிருக்கும்!



## முனைவர் கவிமாமணி அப்துல் காதர்

(ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 23 ஆவது நினைவு தின நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி சாய்ந்தமருதில் நடைபெற்றபோது, தமிழகம்,வாணியம்பாடி, இஸ்லாமிய கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கவிமாமணி அப்துல் காதர் ஆற்றிய சிறப்புரை)

மறைந்த பெருந்தலைவர் அஷ்ரப்புடன் என்னைப் பொறுத்தவரையில் அதிக நெருக்கத்தோடு பழகுகிற வாய்ப்பு குறைவாக இருந்திருந்தாலும் இந்த இலங்கை மண்ணில் முஸ்லிம் மக்களுடைய எழுச்சிக்கும் உரிமைகளுக்குமான ஒற்றை ஆளுமை முகமாக தமிழ் பேசும் முஸ்லிம்கள் எங்கெல்லாம் வாழுகின்றார்களோ அங்கெல்லாம் தெரிந்த முகம் அறிந்த குரல் அஷ்ரப் அவர்களுடையது.

அவரோடு நெருக்கமான இரண்டு விருத்தங்கள், தமிழகத்தில் சிறந்த கவிஞர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆஸ்தான கவிஞர், தோஸ்தான கவிஞர் கவிக்கோ (அப்துல் ரஹ்மான்)வோடு சந்திக்கின்ற வாய்ப்பு தமிழ் நாட்டில் எனக்குக் கிடைத்தது.

அவர் மறைவுற்ற செய்தியை அறிந்த அந்த நாளில் நான் என் நாட்குறிப்பில் எழுதி வைத்தேன். இந்தத் துயரம் ஒரு பகல் மேல் விழுவதாக இருந்தால் பகல் இரவாக மாறிவிடும். அத்தகைய அளவுக்கு கண்களில் கண்ணீர்க் கடலை நிரப்பி, விடைபெற்றுச் சென்ற அந்தத் தலைவருடன் பழகுகின்ற வாய்ப்புகள் சில வேளைகள் மட்டுமே அமைந்திருந்தன. என்றாலும் கூட, அவரின் நினைவுகள் நெஞ்சத்தில் கமழ்ந்த வண்ணமே இருக்கின்றன.

இந்த நாட்டுக்கு வருகை தந்து, ஓர் ஒப்பற்ற சமூகப் போராளியைப் பற்றி என்னுடைய பார்வைப் பதிவுகளை பதிவு செய்வதற்கான வாய்ப்பை எனக்குத் தந்த, நான் மிகவும் நேசிக்கின்ற- மதிக்கின்ற நாங்கள் எப்பொழுதெல்லாம் தமிழகத்துக்கு அழைக்கின்றோமோ அங்கு தாவி வருகின்ற தங்கத் தமிழ் நதியாக எங்கள் கரைகளுக்கு வந்து, நாங்கள் விரும்புகின்ற அந்தத் தாகத்தைப் போக்கக்கூடிய அளவுக்கு உரையாலும், வருகையாலும் எழுத்துகளாலும் எங்களை மகிழ்விக்கின்ற ஒப்பற்ற தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுடைய அழைப்பை ஏற்று இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தத் தருணத்தில் தாயகத்தின் நல்வாழ்த்துகளை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

பெருந்தலைவர் அவர்களைப் பற்றி எழுதவேண்டும் என்று எண்ணி ஒரு முயற்சி செய்தேன். அதனை அப்படியே ஒரு பதிவாக உங்களிடம் சொல்கின்றேன்.

இந்தத் தமிழ், முஸ்லிம் சமூகத்தில் மக்களுடைய உரிமைக்குரலை எழுப்புவதற்காக என் நெஞ்சத்தில் ஏற்பட்ட அந்த வார்த்தை என்னவென்றால், அவர் ஓர் எழுவாய் தலைவர். இந்த இனத்தின் தலைவாயல் தலைவர். எழும்போது இளங்கதிராய், இன்னல்தீர அழும் போது மழை முகிலாய் மண்ணில் விழும் போதும் நல்விதையாய், விழுகின்ற வீழ்ச்சியில் கூட இந்தச் சமூகம் எழுந்து நிற்க வேண்டும் என்ற உணர்வோடு, இந்தத் தங்க மண்ணை விட்டு விடைபெற்றவர் அவர்.

சமூக சிந்தனைக்காகவே அல்லும் பகலும் சமூகத்தை எழுப்பி நிறுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு தனித்தனி எழுத்துகளாகப் பிரிந்து கிடக்கிற இந்தச் சமூகத்தை ஒரு வாக்கியத்தில் ஒன்றாகக் கோர்க்க வேண்டும் என்கின்ற மகத்தான அச்சுக்கோப்புக்காக முன்வந்து தன் பணிகளை ஆற்றி விடைபெற்றிருக்கின்ற அவரை நான் எண்ணிப் பார்க்கின்ற போது அரசியல் ரீதியாக ஆயிரம் மாற்றங்கள் வரலாம்.

நான் அறிவியல், விலங்கியல், தாவரவியல் போன்றவற்றைப் படித்தவன். என்னிடம் ஒரு பத்திரிகையாளர் கேட்டார் தமிழ் தமிழில் தாவரம், செடி, கொடி, மரங்களைப் பற்றிய படிப்பை தாவர இயல் என்று சொல்கின்றனர், அதை ஆங்கிலத்தில் பொட்டனி என்று சொல்கிறார்கள். என்னிடம் அந்தப் பத்திரிகைக்காரர் கேட்ட கேள்வி, பொட்டனிக்கும் கூட்டணிக்கும் என்ன வேறுபாடு என்றார். பொட்டனி என்பது 'தாவர இயல்', கூட்டணி என்பது "தாவுர இயல்"என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

அரசியலில் சக்கரத்தில் ஆரக்கால்களைப்போல் அடிக்கடி இடம் மாறிக்கொண்டே இருப்பார்கள். இங்கிருப்பவர்கள் அங்கிருப்பார்கள், அங்கிருப்பவர்கள் இங்கிருப்பார்கள். இப்படி அரசியல் சக்கரத்தில் ஆரக்கால்களைப்போல் அல்லாமல் கொள்கையோடு நின்ற ஒப்பற்ற பெருந்தகைக்கு பெயர்தான் அஷ்ரப்.

அவர்களைப் பற்றிய நூல்களைப் பார்த்தேன். அவரைப் பற்றி அறிந்தவர்களிடம் கேட்டேன்.

தியாகம் செய்வதற்கு இலக்கிய உலகமாகட்டும் அல்லது அறிவுலகமாகட்டும் இரண்டு பொருள்களை சொல்லலாம்.

ஒன்று, மெழுகுவர்த்தி. மற்றது ஊதுவர்த்தி, மெழுகுவர்த்தி சுடர் ஏற்றி வெளிச்சம் தந்து வெளிச்சம் தந்து துளிதுளியாகத் தன்னை உருக்கி அழித்து மற்றவர்களுக்கு வெளிச்சம் தருவதற்காகவே தன்னை உருக்கி சொட்டு சொட்டாக அழித்து, ஒரு மாபெரும் தியாகத்தைச் செய்து தன்னை அழித்துக் கொள்கிறது.

அடுத்தது, ஊதுவர்த்தி.அது தன் தலையில் நெருப்பு வைத்தாலும் தான் இருக்கக்கூடிய இடத்தில் தன்னைச் சாம்பலாக்கிக்கொண்டு நறுமணம் கமலச் செய்கிறது. ஆனால்,இந்த இரண்டு பொருட்களிலும் எது சிறந்த தியாகத்தைச் செய்கிறது என்று என்னிடத்தில் கேட்டால், மெழுகுவர்த்தி ஓர் இருண்ட இடத்தில் ஏற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால் கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் தந்து - வெளிச்சம் தந்து தன்னைக் கரைத்துக் கொண்டு கடைசியில் மெழுகுவர்த்தி தன் கதையை முடித்துக் கொள்கிறது. ஊதுபத்தி எரிந்து - எரிந்து சாம்பலாகி தன் அடையாளம் முழுவதையும் இழந்து அஸ்தியாக - சாம்பலாக மாறிவிடுகிறது. மணம் தந்து இங்கு பார்க்க வேண்டியது - வெளிச்சம் தரக் கூடிய ஒப்பற்ற பணியை ஏற்றுக்கொண்டு -வெளிச்சம் தரக்கூடிய கடமைக்காக தன்னையே கரைத்து அழித்துக் கொண்டிருக்கக் கூடிய - மெழுகுவர்த்தி தன் கடைசித் துளியை சிந்துகின்றபோது ஓர் இருட்டை விட்டுச் செல்கிறது. ஆனால், ஊதுபத்தி கடைசி வரைக்கும் சாம்பலாகிப் போனாலும் கூட மரணத்திற்குப் பிறகும் அந்த இடத்தில் ஊதுபத்தியின் மணம் கமழ்ந்து கொண்டே இருக்கிறது. அவ்வாறே அஷ்ரப்பின் புகழ் கமழ்ந்து கொண்டே இருக்கிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

''ஒரு வீட்டார் விருந்துக்கு அழைத்திருந்தார்கள், நான் சென்று உணவருந்தினேன். அப்போது நான் அவதானித்தேன், சோற்றைத் தவிர கறிகளிலெல்லாம் உப்பு சேர்த்து சமைத்திருந்தார்கள். ஆனால், சோற்றுக்கு உப்பில்லை. காரணம் கேட்டேன். அதற்கு அந்தப் பெண் "இந்த அரிசியை உருவாக்குவதற்காக ஏழை உழவனின் வியர்வை கலந்திருக்கும் காரணத்தினால் உப்பு போட்டு சமைக்க வில்லை" - என என்னிடம் கூறினார். இன்று அஷ்ரப் போன்ற உப்பு கரைந்துபோயிருக்கலாம். ஆனாலும், கூட அது ஒப்புக்கு பேசுகின்ற பேச்சில்லை. சமூகம் உழைப்பை மதிக்கக்கூடிய சமூகமாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால்.

கரும்பை நீங்கள் பார்த்திருக்கலாம். கடித்து சாப்பிட்டிருக்கலாம். எறும்புக்கு கூட கரும்பைப் பற்றித் தெரிந்திருக்கும். கரும்பைச் சாப்பிட்டுப் பார்த்தால் அடிக் கரும்பிலிருந்து நுனிக்கரும்பு வரைக்கும் வெட்டியெடுத்துவிட்டு அந்தக் கொழுந்தை மாட்டுக்குப் போட்டுவிடுவார்கள். அந்தக் கொழுந்தைக் கடித்துப்பார்த்தால் அதில் உப்பு கசக்கிறது. காரணம், தெரியுமா? தன் உடம்பெல்லாம் அடி முதல் நுனிவரை இனிப்பைத் தேக்கி வைத்திருக்கிற கரும்பு, உச்சியில் உப்பை வைத்திருக்கிறது. உழைக்கக் கூடிய உழவனின் உழைப்பை உயர்வு படுத்துவதற்காக அந்த உப்பை கரும்பு உயர்த்திப் பிடிக்கிறது என்று சொல்லுகிற அந்த அமைப்பிலேதான் அஷ்ரப் அவர்கள் உழைத்த உழைப்பில் இந்தச் சமூகத்தை ஒன்று படுத்த வேண்டும் என்றிருந்தார்.

அஷ்ரப்பின் உழைப்பில் முத்திரையாகப் பார்க்கக் கூடிய அம்சம் இந்த நாட்டிலே அமைதி தவழ வேண்டும், "கண்ணீர்த் துளி வடிவில் கடல் நடுவே நிலம் மிதக்கும் "இதன் பெயர் என்ன?'' என்றால் இலங்கை எனச் சொல்லுகின்றார். பார் அழுத கண்ணீர் பனிக்கடலாய் விரிந்திருக்க, யார் அழுத கண்ணீர் கடல் நடுவே நிலம் மிதக்கும்" ஏறத்தாழ 80களிலே நான் எழுதிய கவிதை. பார் அழுத கண்ணீர் பனிக் கடலாய் விழுந்திருக்க, என்று அழுகையின் ஓலமும் நித்தம் யுத்தம் வடிப்பது ரத்தம் என்று இந்தப் பூமியில் அமைதி பங்கப்பட்டுப்போயிருக்கையில், சமூகங்களை ஒன்றிணைக்கக் கூடிய வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைக்கக்கூடிய தமிழ் சமூகமாக இருந்தாலும், சிங்கள சமூகமாக இருந்தாலும் முஸ்லிம் சமூகமாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் சகோதர உறவோடும் நேசத்தோடும் பாசத்தோடும் இருக்கிற பொழுதுதான் ஒரு தேசத்தைக்கட்டி நிறுத்த முடியும் என்பதைக் கனவு கண்டார் அவர். முஸ்லிம்களுக்காக பல இயக்கங்கள் இருந்தாலும் கூட நான் ஒன்று சொல்கின்றேன். நான் சொல்வதை நீங்கள் அரசியலாக எடுத்துக் கொள்ளக்கூடாது. எத்தனையோ நடிகர்கள் தமிழ் நாட்டில் முதலமைச்சராக வருவதற்கு கோடம்பாக்கத்தில் இருந்து அணி வகுத்து வந்தார்கள். ஆனால், தேர்தல் முடிவு என்ன என்பது உங்களுக்குத் தெரியும். ஆயிரம் நட்சத்திரங்கள் அணி வகுத்து வந்தாலும், "சூரியன் "ஒன்றால்தான் விடிவு என்பது வர முடியும்'' - என்று தமிழ் நாட்டு மக்கள் முடிவெடுத்தார்கள்.

நட்சத்திரங்களைப்போல இந்தச் சமூகம் சிதறிக்கிடக்கிற பொழுது எந்த விடிவும் வந்து சேராது. அடுப்புகளில் அமாவாசை குடியிருப்பு. எனவே, அவர் கற்பனை செய்தார். வெறும் அடுப்பு வெளிச்சம் மட்டுமே பட்டுக் கொண்டிருந்த பெண்களின் முகத்தில் படிப்பு பௌர்ணமி வெளிச்சத்தை பதியலிட்டுப்போட்டு கல்வியிலே ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தலைவர்கள் தலை நிமிர்த்தி தலையை செருக்கி ஆணவத்தால் ஏதோ தாங்கள் உயர்ந்தவர்களைப்போல, வானிலிருந்து குதித்தவர்களைப் போல நடந்து கொள்கிறார்கள்.

டாக்டர் ஷேக் அலி மிகப்பெரும் வரலாற்று ஆசிரியர். பெங்களூர் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்தார். தமிழ் நாட்டில் ஒரு பல்கலைக்கழத்தினுடைய துணை வேந்தரை எதிர்த்து 6,000 மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். 6 நாட்கள் அவரால் பல்கலைக்கழகத்துக்குள் செல்ல முடியாதுள்ளது. 7ஆவது நாள் நான் அவர்களுடன் பேசிக்கொள்கிறேன் என்று உள்ளே செல்கின்றார். அவரை அந்த மாணவர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். இவர் கேட்கிறார் "ஏன் வகுப்புக்கு வராமல் வெளியில் இருக்கிறீர்கள்?" என்று. அதற்கு அந்த மாணவர்கள் "உங்களை எதிர்த்துப் போராட்டம் செய்கிறோம்" என்றார்கள். "என்ன செய்யப் போகின்றீர்கள்?

என்று அவர் கேட்கிறார்.

"உங்களைப் போல ஒரு வைக்கோலில் உருவம் செய்திருக்கின்றோம். ஒரு பிஜாமா, ஒரு சர்வாணி, தலைக்கு ஒரு தொப்பி, கண்ணாடி இப்படி ஒரு கொடும்பாவையை அதாவது, சேக் அலியைப்போல ஓர் உருவத்தைச் செய்து அந்தக் கொடும்பாவையை எரிக்கப் போகின்றோம்" - என்றார்கள். அதற்கு அவர் "மாணவர்களே! தொப்பி அணிந்து, கண்ணாடி அணிந்து, பிஜாமா அணிந்து, உள்ளே ஒரு சட்டையும் போட்டுக்கொண்டு, நீங்கள் செய்திருக்கின்ற இதுதான் ஷேக் அலி என்று சொன்னால் தயவு செய்து இதைக் கொழுத்தாதீர்கள். அடக்கம் செய்து விடுங்கள். அடக்கம் செய்வதுதான் முஸ்லிம்களுடைய பண்பாடு. கொழுத்துவது பண்பாடு இல்லை என்பதை டாக்டர் ஷேக்அலி கர்நாடகத்தில் சொன்னதை நான் இங்கே கேள்விப்படக்கூடாது என்று எண்ணுகிறேன்.

நெஞ்சில் நினைவலைகள் மோதிக் கொண்டிருக்கின்றபோது, நான், நீ என்ற அகந்தையை பெருக்கிக் கொள்ளாமல் இந்த மக்களை ஒன்றிணைக்கக் கூடிய எண்ணத்தோடு பாடுபட்ட அந்த ஒப்பற்ற தலைவரை பாராட்டுவோம். கையேந்தி இறைவனிடத்தில் துஆ செய்வோம். அவருடைய பாவங்களை இறைவா, நீ மன்னிப்பாயாக.அவர்களுடைய நிறைகளை முழுவதுமாக ஏற்று அங்கீகரிப்பாயாக...... உயர்ந்த நல்லோர்கள் இருக்கும் சுவனத்தில் அவருக்குரிய இடத்தை நீ வழங்குவாயாக..... எங்களின் தலைவர் - எங்களுக்காகப் பாடுபட்ட தலைவர், தனக்குப் பிறகு கரைந்து போகும் ஒரு மெழுகுவர்த்தியைப்போல் இருளை விட்டுச் செல்லவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஊதுவர்த்தியை விட்டுசென்றிருக்கிறார். அது மரணத்துக்குப் பின்பும் மணந்து கொண்டே இருக்கும்.''இறைவா நீ இதனை அங்கீகரிப்பாயாக" - என்ற நட்சத்திர வார்த்தைகளோடு எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

**தொகுப்பு:மஹ்தியா காளிமுத்து**

## நக்கல் நமசிவாயம்

**ஈஸ்ரர் தாக்குதல் பற்றி ஒன்றுமே தெரியாதாம்... மைத்ரிபால சிறிசேன ஐயா பார்லிமெண்ட்டில பேசுறத பார்க்கேக்க ஜனாதிபதியா தான் பதவி வகிக்கவில்லை என்று சொன்னாலும் சொல்லுவார்.**



# போர்க்குற்றங்களை விசாரணை செய்ய சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதிப்படுத்தக் கோரி போராட்டம்







*சாவகச்சேரி நிருபர்*

இலங்கையின் போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதிப்படுத்தக்கோரி நேற்று (21) காலை யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

உலக சமாதான தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள்,

"காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும், தமிழ் மக்களை வதைக்கும் சட்டங்களை உருவாக்காதே, இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ வழிவிடுங்கள், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச கண்காணிப்பு வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும், உலக சமாதான தினத்தில் தமிழ் மக்களுக்கு சமாதானம் வேண்டும், இலங்கை அரசே உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்து, மதங்கள் கடந்த மனிதத்தை நேசிப்போம், மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்'' உள்ளிட்ட சுலோகங்களை உள்ளடக்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்ட நிறைவில் இலங்கையின் போர்க்குற்றங்களை விசாரிக்க ஐ.நா. சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதிசெய்ய வேண்டும் எனக் கோரி ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# உலக சமாதான தினத்தில் மன்னாரில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்





*மன்னார் நகர் நிருபர்*

உலக சமாதான நாளான நேற்று வியாழக்கிழமை (21) மன்னாரில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை இலங்கை அரசு ஒப்புக்கொண்டு நீண்ட காலங்களாகியும் அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்தவில்லை.

எனவே உண்மையைக் கண்டறிதல், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதுடன், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் சிவில் அமைப்புகள், பொது அமைப்புகள், மீனவ அமைப்புகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு பல்வேறு வாசகங்கள் எழுதப் பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் அருட்தந்தையர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

## ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்து அச்சுறுத்திய ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

*வவுனியா நிருபர்*

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செய்தி அறிக்கையிடலின்போது ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறை விளைவித்து அச்சுறுத்தலை ஏற்படுத்திய சம்பவமொன்று நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

வவுனியா, ஓமந்தை, சின்ன விளாத்திக்குளம் பகுதியிலுள்ள குளத்தின் அருகில் கற்குவாரி அமைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள் ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, குறித்த பகுதியில் ஊடகவியலாளர்கள் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செயற்பட்டபோது அதனை ஊடகவியலாளர் ஒருவர் வீடியோ பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து குறித்த ஊடகவியலாளரின் வீடியோ பதிவுசெய்த தொலைபேசியை தட்டி ஊடகவியலாளரை அச்சுறுத்தி தாக்க முயன்றுள்ளார். இதனையடுத்து, அங்கு நின்ற ஏனைய ஊடகவியலாளர்களும் பொதுமக்களும் பொலிஸ் அதிகாரியுடன் முரண்பட்டதையடுத்து அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் வவுனியா ஊடக அமையம் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளது.

## மன்னாரில் ரிப்பர் மோதி குடும்பஸ்தர் பலி

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு காட்டுப்புதுக் குடியிருப்புப் பகுதியில் ரிப்பர் வாகனம் மோதி குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (20) மாலை 4 மணிக்கு இடம்பெற்றுள்ளது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில் பின்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் உயிரிழந்தவர் நானாட்டான் பிரதேசத்தில் இராசமடு சாளம்பன் பகுதியில் வசிக்கும் 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான நடராசா ஞானசேகரம் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### நாட்டுக்கு டொலர் வந்து குவியவேண்டுமானால்

# விளையாட்டுத் துறையை மேம்படுத்தி சுற்றுலாத்துறையை கவர்ந்திழுக்குக!



### இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க தெரிவிப்பு

*கண்டி நிருபர்*

சுற்றாடல் தொடர்பாக உலகிலுள்ள அதிசிறந்த 13 தீவுகளில் இலங்கையும் ஒன்று. அதேநேரம், விளையாட்டுத்துறையையும் நாம் அபிவிருத்தி செய்தால் இலங்கை நோக்கி அதிகளவு சுற்றுலாத்துறையினரைக் கவர்வதற்கு வாய்ப்பேற்படும். இதனால் டொலர் வந்து குவியும்.

இவ்வாறு விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க மாத்தளை எட்வேர் மைதானத்தில் நேற்று முன்தினம்(20) இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் நாம் சர்வதேச ரீதியில் பேசப்பட்டோம். தற்போது எல்லோரும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை குறைகூறிக் கொண்டிருக்கிறோம்.

அதனை விடுத்து விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கவேண்டும். இலங்கையில் பிரபலமற்ற ஆனால், சர்வதேச ரீதியில் பிரபலம் பெற்ற விளையாட்டுகளை நம் நாட்டிலும் மேம்படுத்த முடியும். அப்படியான விளையாட்டுகள் பலவற்றை பிரபல்யப்படுத்தி சுற்றுலாத் துறையை கவர எத்தனிக்க வேண்டும் - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com





மலையகத்தின் பல பகுதிகளிலும் பொதுச் சேவையில் ஈடுபட்டு வரும் அப்துல் கலாம் ஞாபகார்த்த சர்வதேச அமைப்பின் ஊவா மாகாணத்துக்கான ஆளுநர்களை நியமிக்கும் கூட்டம் மலங்கமுவ கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது. இதன்போது வசதி குறைந்த குடும்பங்களுக்கு உதவிகள் பல செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அமைப்பின் தலைவர் என்.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் காரியாலய உயரதிகாரிகள் உட்பட பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** *ஜே.எம்.ஹாபீஸ்*





ஹப்புத்தளை கிளனனோர் தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான பதவியேற்பு மற்றும் சின்னம் சூட்டும் விழா நேற்று முன்தினம் (20) பாடசாலை நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பாடசாலை நிர்வாகம் அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர், ஹப்புத்தளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர், கிளனனோர் பிரஜாசக்தி இணைப்பாளர், ஹற்றன் நெஷனல் வங்கி முகாமையாளர் மற்றும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**படங்கள்:** *ராமு தனராஜ்*



**வரலாற்றில் முதல் தடவையாக நுவரெலியா கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் மிகவும் கஸ்ட பிரதேச பாடசாலையான கிறேட்வெஸ்டன் பாடசாலையிலிருந்து மாகாண மட்ட ஆங்கில மொழி தின போட்டியில் பங்குபற்றிய எஸ்.விக்குஸனா ஆங்கில உறுப்பமைய எழுதுதல் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளார். இவரை பாராட்டும் முகமாக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் மாணவிக்கு பரிசில்கள் வழங்கி பதக்கம் அணிவித்து கௌரவித்தார். இதன்போது பாடசாலையின் பிரதி அதிபர் விஜயசுந்தரம், பயிற்றுவித்த ஆசிரியை விஜயகுமாரி மற்றும் மாணவியின் தாயாரும் அருகில் நிற்பதை காணலாம்.**

**படம்:** *தலவாக்கலை நிருபர்*

## புகையிரதப் பாதை புனரமைப்பு: மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

கொழும்பிலிருந்து தற்போது அவிசாவளை வரை ஓடும் களனிவெளி புகையிரத சேவை கைவிடப்பட்டுள்ள நிலையிலிருந்து தற்போது ஓப்பனாயக்க வரையில் புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான மதிப்பீட்டுப் பணிகள் நான்கு கட்டங்களாகத் திட்டமிட்டு நடத்தப்படுவதாக மதிப்பீடுகளை மேற்கொண்டுவரும் புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவிசாவளை முதல் ஓப்பனாயக்க வரையில் மொத்தம் 85 கிலோ மீற்றர் வரையிலான கைவிடப்பட்ட இப்புகையிரதப் பாதையை சட்டவிரோதமாகப் பிடித்து இவற்றில் வீடுகள், கட்டடங்களை அமைத்துள்ளவர்களின் தகவல்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டப்பணி அவிசாவளை முதல் எஹலியகொட வரையிலும் இரண்டாம் கட்டப்பணி எஹலியகொட முதல் பரகடுவ வரையிலும் மூன்றாம் கட்டப் பணி பரகடுவ முதல் இரத்தினபுரி வரையிலும் நான்காம் கட்டப்பணி இரத்தினபுரி முதல் ஓப்பனாயக்க வரையிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

புகையிரத மீள் கட்டமைப்பு அமைப்பு எனும் பெயரில் இயங்கும் அமைப்பின் ஏற்பாட்டில் போக்குவரத்து அமைச்சு மற்றும் ரயில்வே திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவுடன் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

## உலக உணவுத் திட்டத்தின் கீழ் 1000 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் பங்கீடு

*கண்டி நிருபர்*



உலக உணவுத் திட்டத்தின் கீழ் தலவாக்கலை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 1000 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் (20) பகிர்ந்தளிக்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த இவர்களுக்கு அக்கரப்பத்தனை பிரதேசத்தில் இவ்வாறான பொதிகள் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி பொதியில், 50 கிலோ அரிசி, 05 லீற்றர் தேங்காய் எண்ணெய், பருப்பு 10 கிலோ அடங்கலாக உலருணவுகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board | புதன்கிழமை 2023.09.20 | உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk | NLB

மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5243 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,711,616.00
ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கங்கள் 8 0 5 1 6 1

கொவிசெத | சீட்டிழுப்பு இலக்கம் 3485 | சீட்டிழுப்பு திகதி 2023.09.20 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,537,179.20
ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 27 35 42 70 | விசேட எழுத்து F | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 57133

லக்கி 7 | திகதி 20.09.2023 | சீட்டிழுப்பு இலக்கம் 0069
வெற்றி இலக்கினம் கடகம் | வெற்றி இலக்கங்கள் 9 2 6 3 4 0
L7 இலக்கம் 0 9 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.10,965,738.00

தன நிதானய | தேதி 2023/09/20 | சீட்டிழுப்பு இலக்கம் 1273 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,079,039.20
ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கங்கள் 05 37 69 76 | விஷேசட ஆங்கில எழுத்து L
Double Chance இலக்கம் 13571

ராசி சுப பலன் Handahana | சீட்டிழுப்பு இலக்கம் 552 | சீட்டிழுப்பு திகதி 2023-09-20 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,137,073.20
வெற்றி இலக்கினம் சிம்மம் | வெற்றி இலக்கங்கள் 01 17 40 42 | விசேட இலக்கினம் சிம்மம்

Mega POWER | சீட்டிழுப்பு இலக்கம் 1591 | 20/09/2023 | 69068 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.408,341,516.00
ஆங்கில எழுத்து O | சுப்பர் இலக்கம் 18 | வெற்றி இலக்கங்கள் 04 19 38 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# இலங்கையில் முதலீடு செய்ய மலேசிய நிறுவனங்கள் ஆர்வம்



## சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் அந்நாட்டு அரசாங்கம் இணக்கம்



இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புகளில் மலேசிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாகவும் மலேசியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான இலங்கையின் கோரிக்கையை ஏற்பதாகவும் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மலேசிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹிமுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் (20) நியூயோர்க்கில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இரு நாட்டு தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புகளில் மலேசிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த பிரதமர் அன்வர் இப்ராஹிம், மலேசியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான இலங்கையின் கோரிக்கைக்கும் சாதகமான பதிலை வழங்கியுள் ளார்.

அத்துடன், வலயத்தின் விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் அங்கத்துவம் பெறுவதற்கான இலங்கையின் கோரிக்கையை ஆதரவளிப்பதாக மலேசியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர ரிம் கூட்டமைப்பின்(IORA) பிராந்திய மாநாட்டில் மலேசிய வெளிவிவகார அமைச்சர் பங்கேற்பார் எனவும் பிரதமர் அன்வர் பின் இப்ராஹிம் உறுதியளித்தார்.

மலேசியாவுக்கு விஜயம் செய்யுமாறு மலேசிய அரசரின் அழைப்பை மலேசிய பிரதமர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் அடுத்த வருடம் மலேசியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக உறுதிப்படுத்தினார். வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத் தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி மொஹான் பீரிஸ் ஆகியோரும் மலேசிய தூதுக்குழுவுடனான சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் பாராட்டு



இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தையும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா பாராட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுக்கும் (Kristalina Georgieva) இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. சபையின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிதித்துறை சீர்த்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, இலங்கையில் பணவீக்கத்தைக் குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்துக்கு பொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் தினேஷ் வீரக்கொடி, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி மொஹான் பீரிஸ் உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

# "நடுக்கடலில் வைத்து எங்களை தாக்கினார்கள்"

## இலங்கை கடற்படையினர் மீது இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றச்சாட்டு

மன்னார் நகர் நிருபர்

தனுஷ்கோடிக்கு அருகில் நேற்று (21) இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லைதாண்டி மீன்பிடித்ததாக குறிப்பிட்டு மீனவர்களை நோக்கி கற்களை கொண்டு வீசி விரட்டியதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் சுமார் 400 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (20) மாலை மீனவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் எல்லைத் தாண்டி மீன்பிடிப்பதாக ஒலிபெருக்கி மூலம் எச்சரித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் கைது நடவடிக்கைக்கு அஞ்சி அங்கிருந்து வேறு திசைகளை நோக்கி சிதறிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து, நேற்று (21) காலை மீனவர்கள் தனுஷ்கோடி அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக மீனவர்களை நோக்கி கற்களைக் கொண்டு வீசி விரட்டியுள்ளனர்.



மேலும், விசைப்படகில் இருந்த மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்படை மீன்பிடி வலைகளை வெட்டி கடலில் வீசியதாக கரை திரும்பிய மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனால் நடுக்கடலில் மீனவர்கள் மீன்பிடிக்க விடாமல் இலங்கை கடற்படை தொடர்ந்து விரட்டியதால், மீனவர்கள் மீன்பிடிக்க முடியாமல் படகு ஒன்றுக்கு சுமார் 70 ஆயிரம் இந்திய ரூபா வரை நட்டத்தை சந்தித்துள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மாணிப்பாயில் பஸ் தீக்கிரை



பு.கஜிந்தன்

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாவல்கட்டு பகுதியில் பஸ் ஒன்று நேற்று அதிகாலை தீ விபத்துக்குள்ளாகி, முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. எலியாஸ் சுரேஷ்குமார் என்பவரது பஸ்ஸே இவ்வாறு எரிந்து சாம்பராகியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த பஸ் கடந்த திங்கட்கிழமை பயணிகளை ஏற்றியவாறு சுற்றுலாவுக்கு சென்றது. இவ்வாறு சுற்றுலா சென்ற பஸ் நேற்று அதிகாலை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வருகைத்தந்துள்ளது.

இந்நிலையில் பஸ் சாரதி, பஸ் உரிமையாளரின் வீட்டுக்கு முன்னால் உள்ள காணியில் நிறுத்தி விட்டு பஸ்ஸின் உரிமையாளருடன் கதைத்துவிட்டு வீட்டுக்கு சென்றுள்ளார். பின்னர் சிறிது நேரத்தில் இரண்டு பாரிய சத்தங்களுடன் பஸ் தீப்பற்றி எரிய ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கடற்றொழிலுக்கு செல்வதற்கு சென்ற இளைஞர்கள் பஸ் எரிவதை அவதானித்த நிலையில் தீயினை அணைக்க முயன்றனர். இருந்தும் பஸ் முற்றாக தீயில் எரிந்து சாம்பராகியுள்ளது.

இயந்திர கோளாறு காரணமாக பஸ் தீப்பிடித்து எரிந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீலாத் மௌலித் மஜ்லிஸ் நாளை

பீ.எம். முக்தார்

இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவதரித்த இந்த புனித ரபியுனில் அவ்வல் மாதத்தினை முன்னிட்டு பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தை முர்ஸியா ஷாதுலிய்யா ஸாவியாவில் வருடாந்தம் நடைபெறும் சுப்ஹான மௌலித் மஜ்லிஸ் நாளை (23) அஸர் தொழுகையோடு ஆரம்பமாகும்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் வழி காட்டலின் கீழ் மேற்படி ஸாவியா பரிபாலன சபை ஜமாஅத்தாரின் பங்களிப்புடன் நடத்தும் இம் மஜ்லிஸில் இந்தியா சேலம் நூருல் இஸ்லாம் அரபுக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அப்ழலுல் உலமா மௌலவி அபூதாஹிர் (பாகவி) விசேட சொற்பொழிவாற்றுவார்.

ஸாவியாவின் பிரதம இமாம் மௌலவி முஹம்மத் இஸ்மத் (முர்ஸி) தலைமையில் நடைபெறும் இம்மஜ்லிஸில் கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.எம்.ஸைனுலாப்தீன் (பஹ்ஜி), மௌலவி எம்.ஐ.எம்.ரபீக் (பஹ்ஜி) ஆகியோர் திக்ர்(ஹழரா) மஜ்லிஸை நடத்தி வைப்பர்.



அஸர் தொழுகையைத் தொடர்ந்து சுப்ஹான மௌலித் மஜ்லிஸும் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வலீபா யாகூதிய்யா மற்றும் திக்ர் (ஹழரா) நிகழ்வும் துஆப் பிராத்தனையும் இடம்பெறுவதோடு இஷாத் தொழுகையின் பின்னர் விசேட மார்க்கச் சொற்பொழிவும் நடைபெறும்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம்.முக்தார் உட்பட பள்ளிச் சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், இஹ்வான்கள் நிகழ்வில் கலந்து கொள்வர்.



இறக்குவானை கரன்கெட்டிய மகா காளி கோயில் வருடாந்த விசேட பூஜை நிகழ்வின்போது சிறுவர்கள் சாமிவேடந்தரித்து வழிபாட்டில் ஈடுபட்டதனை படங்களில் காணலாம்.

படங்கள்: எஸ்.ராமதாஸ்

# விநாயகர் சதுர்த்தி விழாவும் இந்து எழுச்சி ஊர்வலமும்

இரத்தினபுரி மாவட்ட விநாயகர் சதுர்த்தி விழாவும் இந்து எழுச்சி ஊர்வலமும் கஹவத்தை நகரில் வெகு விமர்சையாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்து மகா சபையும் விஷ்வ இந்து பரிஷத்தும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள குறித்த ஊர்வலமானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(24) இடம்பெறவுள்ளது.

இவ் ஊர்வலமானது, அன்றைய தினம் பிற்பகல் 1:00 மணிக்கு யாயின்ன சர்வோதய கட்டிடத்துக்கு அருகாமையில் விநாயகர் பூஜையுடன் ஆரம்பித்து, கஹவத்தை நகர் வழியாக ஊர்வலமாக வந்து, கெட்டியதென்ன ஆற்றங்கரையில் விஷர்ஜன நிகழ்வுடன் நிறைவுறும் என்றும் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் கஹவத்தை இந்து மகா சபையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.



வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீகண்கண்ட விநாயகர் கோவிலின் விநாயகர் சதுர்த்தி தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது இடம்பெற்ற பூஜை நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

படங்கள்: எஸ்.ராமதாஸ்



திருகோணமலை வித்தியாலயம் வீதி சாயி சேவா நிலைய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சீரடி சாய்பாபா சன்னிதானத்தின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு அண்மையில் விசேட சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன. ஆர்த்தி பூஜை மற்றும் பஜனையும் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு புதுச்செட்டித்தெரு சீரடி சாய்பாபா ஆலய தலைமை அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் கலந்துக்கொண்டார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (21.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.9987 | 213.7307 |
| கனேடியன் டொலர் | 235.0283 | 246.3317 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.9068 | 45.8419 |
| யூரோ | 337.7531 | 353.0738 |
| ஜப்பான் யென் | 2.1422 | 2.2390 |
| சிங்கப்பூர் டொலர் | 231.9835 | 242.9382 |
| ஸ்ரேலிங் பவுன் | 392.1542 | 408.2828 |
| சுவிஸ் பிராங்ங் | 351.2272 | 369.8304 |
| ஐ.அ. டொலர் | 318.9021 | 329.9016 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 862.1914 |
| குவைட் | குவைட் தினார் | 1,050.9153 |
| ஓமான் | ஓமான் றியால் | 843.4129 |
| கட்டார் | கட்டார் றியால் | 89.0715 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.5685 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.4022 |

# சர்வதேச நீதி பொறிமுறை கோரி மட்டக்களப்பில் கவனயீர்ப்புப் போராட்டம்





கனகராசா சரவணன்

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிப் பொறி முறையை உறுதிசெய்யுமாறு கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று (21) வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு செய்த மேற்படி கவனயீர்ப்புப் போராட்டமானது மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது. இப்போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

''வேண்டும் வேண்டும் சர்வதேச நீதி பொறி முறை, வடகிழக்கு மக்களின் கலாசார தலங்களை அத்துமீறாதே, சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்து, வலிந்து காணாமலாக் கப்பட்டோருக்கு நீதி வேண்டும், வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் இன அடையாளங்களை அழிக்காதே, போர்க்குற்றங்கள் செய்தவரை நீதியின் முன் நிறுத்து. வெள்ளைவான் கடத்தல்காரரை நீதியின் முன் நிறுத்து'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். இப்போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

இதன்போது தமது கோரிக்கைகள் அடங்கிய ஐக்கிய நாடுகள் சபைக்கான அறிக்கையை மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளிடம் போராட்டக்காரர்கள் கையளித் தனர்.

# சர்வதேச நீதி கோரி திருமலையில் போராட்டம்





கந்தளாய் செய்தியாளர்

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச நீதியைக் கோரிய ஜனநாயகப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை (21) காலை 10.00 மணியளவில் திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது.

''74 வருட தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களை விசாரிக்க சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதிசெய், வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம்களின் இன, மத அடையாளங்களை அழிக்காதே'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். இப்போராட்டத்தின் இறுதியில் திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச பொறிமுறையை உறுதிப்படுத்துமாறு கோரிய ஜனநாயக மக்கள் போராட்டம் நேற்று (21)வியாழக்கிழமை வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இடம்பெற்ற நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான இப்போராட்டமானது திருகோணமலையிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆசிரியர் மீது தாக்குதல்

மீராவோடை செய்தியாளர்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட மீராவோடை அல் -ஹிதாயா வித்தியாலய ஆசிரியர் மீது நேற்று முன்தினமிரவு (20) தலைக் கவசத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை தீர்த்து வைக்க முற்பட்ட ஆசிரியர் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன் அவரது தந்தை உள்ளிட்ட குழுவினர் இரவு நேர கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் மீது தலைக் கவசத்தால் தாக்கியுள்ளனர்.

இத் தாக்குதலில் தலைப் பகுதியில் பலத்த காயமடைந்த ஆசிரியர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்தர வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஆசிரியரை தாக்கிய குழுவினர் தலைமறைவாகி யுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட ஏனைய நபர்களை கைது செய்ய வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கஜேந்திரன் எம்.பி. மீது தாக்குதல்: மூதூரில் கண்டனப் போராட்டம்



அப்துல்சலாம் யாசீம்

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கோரியும் கண்டனப் போராட்டமொன்று நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றது.

கட்டைபறிச்சான், இறால் பாலத்தில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக மூதூர் மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தாக்குதல் சம்பவத்துக்கு எதிராக எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்திவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோர் ஆன்மீக சுற்றுலா

மட்டக்களப்பு

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட பிரஜைகளை மகிழ்விக்கும் நோக்கில் மட்டக்களப்பின் பல பாகங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளும் முதியோர் ஆன்மீக சுற்றுலா நேற்று (21) முன்னெடுக்கப்பட்டது.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி அனுசரணை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் வீ.தவராஜாவின் வழிகாட்டலில் அப்பிரதேசத்தில் வசிக்கும் சிரேஷ்ட பிரஜைகளை மகிழ்விக்கும் நோக்கில் இந்த முதியோர் ஆன்மீக சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆண் பெண் இருபாலாருமாக சுமார் 50 சிரேஷ்ட பிரஜைகள் அடங்கிய இவ் ஆன்மீக சுற்றுலா குழுவினரை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஏ.சீ.நஜிமுதீன் தலைமையிலான உத்தியோகத்தர் குழாமினர் அழைத்துச் சென்றனர்.

இவ் ஆன்மீக யாத்திரையின்போது சிரேஷ்ட பிரஜைகள் ஏறாவூர் வாவிக்கரைப் பூங்கா, காத்தான்குடியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஷா வடிவிலான பள்ளிவாசல், காத்தான்குடி கடற்கரை மற்றும் 1ஆம் குறிச்சி மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் உட்பட மட்டக்களப்பு காந்திப் பூங்கா, அங்கு இடம்பெறும் ஓவியக் கண்காட்சி என்பவற்றினை பார்வையிட்டனர்.

இதன்போது பிரதேச செயலக சமூக சேவைக் கிளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.ஐ.நசூஹா, எம்.பீ.சமீமா, ஜே.எப். பர்சானா, ஆர்.யாழினி, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.பீ.எப்.பர்ஸானா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம். சாஜஹான், அலுவலக உதவியாளர் கே.எல். இஜாஸ் ஆகியோர் இவ் ஆன்மீக சுற்றுலாவில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவிப்பு

கனகராசா சரவணன்



இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சட்டவிரோதமாக சேகரித்த சொத்துகளை பறிமுதல் செய்து இம்மாவட்டத்தில் அவரால் பாதிக்கப்பட்டிருக்கின்ற குடும்பங்களுக்கு வழங்க வேண்டும். அத்துடன் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக் களப்பு கட்சிக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை (20) இடம்பெற்ற ஊடக மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், கடந்த 17ஆம் திகதி திருமலை கப்பல்துறையில் திலீபனின் ஊர்தியுடன் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சென்றபோது பேரினவாத செயற்பாட்டாளர்களால் அவர் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டதோடு வாகன ஊர்தியும் அடித்து நொறுக்கப்பட்டது.

மேற்படி சம்பவத்துக்கு தமிழர் தாயக மக்களும் முக்கியஸ்தர்களும் சர்வதேசம் எங்கும் வாழுகின்ற தொப்புள் கொடி உறவுகளும் பலத்த கண்டனங்களை தெரிவிக்கின்ற இந்த வேளையிலே, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அந்த பவனியை கொண்டு செல்வதற்கு பொலிஸாரிடம் அனுமதி பெறவேண்டும் எனவும் நினைவேந்தல் செய்ய சட்ட ஒழுங்கை மதித்து நடக்க வேண்டும் எனவும் ஒரு பிழையான கருத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி பொத்துவிலிலிருந்து தியாகதீபம் திலீபனின் ஊர்தி பவனி ஆரம்பமாகி 16ஆம் திகதி மட்டக்களப்பை வந்தடைந்தது. இந்நிலையில் மக்களின் அஞ்சலியின் பின்னர் 17ஆம் திகதி திருகோணமலைக்கு பவனி சென்ற போது பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தாக்கப்பட்டதோடு ஊர்தியும் நொறுக்கப்பட்டது. அந்த இடத்திலே இருந்த பொலிஸார் பாராளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும்போது அதனை தடுக்காமல் இருந்தார்கள்.

இந்நிலையில், கிழக்கு ஆளுநர் தமிழனாக இருந்து இந்த கருத்தை வெளியிட்டிருந்தால் யதார்த்தமான கருத்தை வெளியிட்டிருப்பார். மாறாக பதவியை தக்கவைப்பதற்காக எஜமானுக்கு விசுவாசமாக கருத்தை வெளியிட்டிருப்பதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை மீறி பல்வேறு விதமான செயற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்களை வெளியேறுமாறு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பித்து ஒரு வருடம் கடந்த நிலையில், அதனை மீறி பெரும்பான்மை இனத்தவர்கள் மேய்ச்சல் தரை பிரதேசத்தில் தொடர்ந்தும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு பண்ணையாளர்களை துன்புறுத்தி வருகின்றனர்.

அதேவேளை, திருகோணமலையில் பல விகாரைகள் சட்டவிரோதமாக கட்டுப்படுகின்றன. அதனை தடை செய்யாமல் அதற்கு அனுமதி வழங்கியதுடன் மட்டக்களப்பில் சட்டவிரோத மணல் அகழ்வும் இடம்பெறுகிறது.

எத்தனையோ வளங்கல் மண்மாபியாக்களால் சுரண்டப்படுகின்றன. இது சட்டவிரோதமாக நடக்கின்ற செயற்பாடுகள். இந்த விடயங்களை விட்டுவிட்டு எங்கள் மீதும் குற்றச்சாட்டை முன்வைத்து காந்திய தேசத்துக்கு அஹிம்சையை கற்றுக் கொடுத்த தியாக தீபம் திலீபனின் அஹிம்சைவழி போராட்டத்தை கொச்சைப்படுத் தியுள்ளார்.

எனவே, ஆளுநர் நேர்மையானவர் என்றால் சட்டம் ஒழுங்கை அங்கே பார்த்திருக்க வேண்டும். இங்கே இவ்வாறான கருத்துகளை முன்வைப்பது மிகவும் நகைப்புக்குரிய விடயம்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரிகளை சனல் - 4 தெளிவாக வெளியிட் டுள்ளது. இந்த தாக்குதலுக்கு பின்னால் இருந்த சூத்திரதாரிகள் இந்த மண்ணிலே செய்த அட்டூழியங்கள் வெளிக் கொண்டுவரப்பட் டுள்ளன.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி என கூறி மக்கள் மத்தியில் தன்னை அடையாளப்படுத்தி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி என்ற பெயரில் புலிகள் என்ற நாமத்தை வைத்து மக்களை ஏமாற்றி அரசியல் செய்துவந்த ஒரு சூத்திரதாரி பிள்ளையான். அவருடன் நெருக்கமாக இருந்த ஆசாத் மௌலானா மூலம் அந்த உண்மைகளை வெளிக் கொணர்ந்ததையிட்டு மக்கள் விழிப்ப டைந்துள்ளனர். எனவே இனியும் மக்கள் ஏமாறக்கூடாது.

தமிழ் மக்கள் போராடிவந்த ஆயுத போராட்டத்தை கடந்த 13 வருடங்களாக இப்படிப் பட்டவர்கள் சிங்கள தேசத்துடன் இணைந்து காட்டிகொடுத்துள்ளனர் என்றார்.

# கலாசார அலுவல்கள் அமைச்சு நடத்திய பிரதீபா போட்டி

## சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்களுக்கு கௌரவம்




எம்.எஸ்.எம்.ஸாகிர்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட பிரதீபா - 2023 போட்டிகளில் சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை (20) சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம்.ரிம்சான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸ்வரன் பிரதம அதிதியாகவும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

பிரதீபா போட்டியில் வெற்றி பெற்றமை சாய்ந்தமருது வரலாற்றில் பாரியதொரு சாதனை யாகும். ஏனெனில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு மாத காலப்பகுதியிலேயே இச்சாதனை நிலைநாட்டப் பட்டுள்ளது.

இதற்கிணங்க கோலாட்டப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் முதலிடத்தைப் பெற்ற மாணவர் களான எம்.எப்.எம்.றிஹ்பத், ஏ.ஜீ.எம்.ஆஸிப், என்.ஹம்தி, என்.எம்.இஷாம், ஜே.எம்.றிப்காஸ், என்.நப்ரின், ஜே.எம்.ஷாபீத், என்.எம்.அல்தாப், ஏ.எம்.எம்.நுஸ்கி, என்.எம்.எம். றுக்ஸான், ஏ.எம்.அஸ்ரி, ஏ.எம்.ஹபீஸ், ஜே.எம்.ஜகி, ஏ.எம்.எம். அர்ஷிக், எப்.எம்.ஹசீன் ஆகியோரும் ரபான், கோலாட்டப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் இரண்டாமிடம் பெற்ற மாணவர்களான ஜே.எம்.ஜரிஹ், எம்.எப்.எம். அஸ்பல், எம்.எப்.எம்.பஹட், ஏ.ஆர்.எம்.சப்கி, என்.அமைத் அஹமட், எஸ்.எம்.ஏ.மஹ்தி, எம்.ஆர். இஸ்ஸத், எம்.ஐ.எம். அபான், எஸ்.எம். ஆதிப், எம்.பிஸ்மில்லாஹ், எம்.ஏ.எம்.அப்துல் ஹாதி, எப்.எம்.பர்ஹான், ஆர்.ஏ.எம்.அஹ்னாப் ஆகியோரும் சித்திரப் போட்டியில் எம்.எல். பாத்திமா ஜியா முதலாம் இடத்தையும் ஜே.றின்சான் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டவர்களும் கலாசார மத்திய நிலையத்தில் மேற்குறித்த மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான, எம்.ஐ.எம்.அமீர் (ஆசிரியர்) எம்.ஐ.அலாவுதீன் (அண்ணாவி) எம்.எச்.பைசர் (அண்ணாவி), ஏ.இஸ்ஸதீன் (அண்ணாவி), ஏ.எல்.எம்.சாஜி (ஆசிரியர்), ஐ.எம்.சியாம் (ஆசிரியர்) மற்றும் எஸ்.எச்.ஏ.கபூர் (வாத்தியம்) ஆகியோர் நினைவுச் சின்னம் மற்றும் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருதின் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.பர்ஹான், பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீக்கா, பிரதேச செயலக கலாசார உத்தி யோகத்தர் சுரேஷ்குமார், கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி. நௌசாத், நிந்தவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப், மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழு செயலாளர் கலைஞர் அஸ்வான் மௌலானா, பாடகர் எம்.சீ.ஏ.மாஹிர் உட்பட கலாசார மத்திய நிலையத்தின் மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருதில் நீண்ட காலமாக கலாசார நிகழ்வுகள் தொடராக நடந்து வருகின்றன. இருந்தபோதிலும் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தை வைபவ ரீதியாக இன்னும் திறக்கப் படாத நிலையிலும் இவ்வெற்றி கிடைத்தமை சவாலானதொரு விடயம்.

இவ்வெற்றிக்காகப் பங்குபற்றிபாடுபட்ட அனைவருக்கும் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம்.றிம்ஸான் இதன் போது வாழ்த்துகளோடு பாராட்டுகளையும் தெரிவித்தார்.

இதன்போது கலைஞர் அஸ்வான் மௌலானா மற்றும் பாடகர் எம்.ஏ.சீ.மாஹிர் ஆகியோர் பாடல்களைப் பாடி சபையோரை மகிழ்வித்த மையும் குறிப்பிடத்தக்கது.

## உயிர்த்த ஞாயிறு விவகாரம்

# சனல்-4 வெளிக்கொணர்ந்த விடயங்களை விட இன்னும் பல தகவல்கள் வெளிவரத் தொடங்கும்

## முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு




மட்டக்களப்பு நிருபர்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பாக சனல் - 4 வெளிக்கொணர்ந்த விடயங்களை விட இன்னும் பல தகவல்கள் வெளிவரத் தொடங்கும் எனத் தெரிவித்த கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் பெற்றிகலோ கெம்பஸின் ஸ்தாபகருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, பெற்றிகலோ கெம்பஸ் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துடன் கூட்டிணைந்து இயங்கவிருப்பதால் இனிமேல் குறித்த தனியார் பல்கலைக்கழகத்தின் பெயர் எஸ்.எல்.ரீ. - பெற்றிகலோ கெம்பஸ் என்றே அழைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் படையினரிடமிருந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது. இது தொடர்பாக ஏறாவூரில் நேற்று (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏறாவூர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாறுஸ்ஸலாம் அலுவலக பொறுப்பாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய செயற்குழு உறுப்பினருமான சி. அஸனார் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தின மிலேச்சத்தனமான தாக்குதல் நடவடிக்கைக்கும் முஸ்லிம்களுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்பதைத்தான் புலனாய்வு அறிக்கைகளும் சனல் - 4 வெளியிட்ட விடயங்களும் வெளிக்கொண்டு வந்துள்ளன.

இந்த விடயத்தை வெறுமனே விசாரணை ஆணைக்குழுக்களோடு மாத்திரம் விட்டு விடாமல் அரசாங்கம் புலனாய்வுப் பிரிவைக் கொண்டும் தேவையேற்படுமிடத்து சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற்றும் விசாரிக்க வேண்டும்.

இச்சம்பவத்தில் யார் யார் எந்த நோக்கத்துக்காகச் சம்பந்தப்பட்டிருந்தார்கள், சனல் - 4 இல் சொல்லப்பட்டிருக்கின்ற விடயங்கள் உண்மையா என்பதெல்லாம் விசாரணையில் கண்டறியப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கையாகும்.

சனல் - 4 இல் சொல்லப்பட்டதை விட இன்னும் அம்பலமாகாத முக்கியமான பல விடயங்கள் வெளியில் இருக்கக் கூடும். இனி அவை வெளிவரத் தொடங்கும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பால் நாடு பல பாதிப்புகளை எதிர்கொண்டது. மட்டக்களப்பு கெம்பஸ் மூடப்பட்டுக் கிடந்ததால் நாட்டுக்கு வரவேண்டியிருந்த 100 மில்லியன் டொலர்கள் வருமானம் இல்லாமல் போய்விட்டது.

எஸ்.எல்.ரி.–மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் தற்போதைக்கு சுமார் 3,000 தொடக்கம் 4,000 ஆயிரம் மாணவர்கள் தமது துறைசார்ந்த பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் வசதி உள்ளது.

அதேவேளை, அதன் மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகளும் முடிவடைந்த பின்னர் சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் கற்கக்கூடிய ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகமாக அது திகழும்.

இது இலங்கையின் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூக மாணவர்களுக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

அதேவேளை, நடைமுறையில் ஒப்பீட்டளவில் அரைவாசிக் கட்டணத்துடனேயே மாணவர்கள் தமது பட்டப்படிப்பை முடித்துக்கொள்ளும் சலுகை இங்கே வழங்கப்படும்.

அடுத்தாண்டு ஜனவரியில் கற்கைகள் ஆரம்பிக்கப்படும். இலங்கையின் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் இல்லாத வசதிகளுடன் நாட்டின் அதியுயர் சிறந்த பிரஜைகளை உருவாக்கும் ஒழுக்கமான கல்வியும் இங்கே போதிக்கப்படும் என்றார்.

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் மட்டக்களப்பு எல்லைக் கிராமமான ஜெயந்தியாயவில் அமைந்துள்ள மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் சுமார் 1800 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

அது ஈஸ்டர் குண்டு வெடிப்புடன் படையினரால் கையகப்படுத்தப்பட்டு கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் நிலையமாகப் பயன்படுத்தப்பட்டு பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது .

இவ்விடயம் தொடர்பாக தொடராக இடம்பெற்ற முன்னெடுப்புகளின் பிரகாரம் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தை அதன் ஸ்தாபகரும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்விடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை (20) பெற்றிகலோ கெம்பஸ் அதன் நிர்வாகத்திடம் படையினரால் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத் தின் ஏறாவூர் உட்பட பிரதான நகரங்களில் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் விடுவிக்கப்பட் டதை வரவேற்று பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

# உவர்மலை விவேகானந்தாவில் விழிப்புணர்வுச் செயலமர்வு







அப்துல்சலாம் யாசீம்,கிண்ணியா, மூதூர் செய்தியாளர்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையினால் கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுமுன்தினம் (20) உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்துகொண்டார்.

சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் இளைஞர் - யுவதிகளை இணைத்துக்கொள்வதற்கான செயற்றிட்டமாக இத்திட்டம் அமைந்திருந்தது.

விமானத்துறையில் காணப்படும் தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான முன்னேற்பாடுகள், தேவையான அடிப்படைத் தகைமைகள், தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பன தொடர்பாக இதன்போது தெளிவூட் டப்பட்டது.

இதன்போது பாடசாலை மாணவ - மாணவிகளிடம் விமான சேவை சம்பந்தமான கேள்விகள் துறைசார் அதிகாரிகளினால் கேட்கப்பட்டதுடன், சரியான விடையளித்த மாணவ மாணவிகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ. திசாநாயக்க, ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திப் பிரிவின் மேலதிக செயலாளர் எல். இளங்கோவன், இலங்கை விமானப் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், திருகோணமலை மாவட்ட வலயக் கல்வி அலுவலகப் பிரதானிகள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறு கோரிக்கை

காரைதீவு செய்தியாளர்

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட காரைதீவு இராமக்கிருஷ்ண சங்க ஆண்கள் பாடசாலையில் ஆசிரிய பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடையும் அபாயநிலையை எதிர்நோக்கியுள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பாடசாலை அதிபரிடம் பெற்றோர் வினவியபோது அதிபர் குறிப்பிடுகையில், மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப ஆசிரியர்கள் இன்மையால் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளில் தடையேற்பட்டுள்ளது. தற்போது ஆரம்பப் பிரிவில் மூன்று ஆசிரிய பற்றாக்குறை நிலவுகிறது. இவ்விடயம் தொடர்பாக கல்வி அதிகாரிகளுக்கு பல மாதங்களுக்கு முன்னர் எழுத்துமூலம் அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இப்பாடசாலையானது காரைதீவு பிரதேச ஏழை மற்றும் நடுத்தர மாணவர்களின் பிரதான பாடசாலையாகும்.

எனவே, மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கவனத்திற்கொண்டு மேற்குறித்த பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அப்துல்சலாம் யாசீம்

கந்தளாய் பொலிஸ் பிரிவில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு (20) இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் -வெவ்சிறிகம பகுதியைச் சேர்ந்த தெபிலியனகே விமலரத்ன (69 வயது) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரி ழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த நபர் வீட்டிலிருந்து கடைக்குச் சென்றபோதே மேற்படி அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணை களை கந்தளாய் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தாயிலிருந்து சிசுவுக்கு HIV, SYPHILIS பரவுவதை தடுத்தல்

## கல்முனையில் கருத்தரங்கு





பொத்துவில், மாளிகைக்காடு செய்தியாளர்கள்

தாயிலிருந்து சிசுவுக்கு HIV மற்றும் SYPHILIS பரவுவதைத் தடுப்பதற்கான செயற்றிட்டம் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரிகள், தாதியர்கள் ஆகியோருக்கு தெளிவூட்டும் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று முன்தினம் (20) கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய பாலியல் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு குறித்த பயிற்சிக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையுரையாற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின்போது பிரதம வளவாளராகக் கலந்துகொண்ட விசேட வைத்திய நிபுணர் பியூமி பெரேரா தாயிலிருந்து சிசுவுக்கு HIV மற்றும் SYPHILIS பரவுவதைத் தடுத்தல், நோயாளர்களுக்கான சிகிச்சை மற்றும் பரிசோதனைகள், குறித்த நோய் தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டம் என்பன குறித்து விரிவுரையாற்றினார்.

பாலியல் தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.என்.எம். தில்ஷான், தொற்றுநோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.சீ.எம்.பஸால், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எம்.எ.எம்.ஹில்மி ஆகியோரும் இந்நிகழ்வில் வளவாளர்களாகக் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நாங்கள் வீதியில் குந்தி இருந்தால் குடும்ப வாழ்வாதாரம் என்னவாகும்?

## மயிலத்தமடு மாதவனை கால்நடைப் பண்ணையாளர் சங்கத் தலைவர்



வாழைச்சேனை மேலதிக, கிரான் செய்தியாளர்கள்

கடந்த ஏழு தினங்களாக வீதி ஓரங்களில் கொட்டும் மழையிலும் வெயிலிலும் எங்களது வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் கோரிக்கையை முன்வைத்து அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். கால் நடைப் பண்ணையாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்புச் செய்து வருகின்றனர். ஒரு நாளைக்கு சுமார் 3000 லீற்றர் வரையான பால் அரச, தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறோம் எனத் தெரிவித்த மயிலத்தமடு மாதவனை கால்நடைப் பண்ணையாளர் சங்கத் தலைவர் சீனித்தம்பி நிமலன், நாங்கள் வீதியில் குந்தி இருந்தால் எங்களது குடும்ப வாழ்வாதாரம் மற்றும் கால்நடைகளின் நிலைமை என்னவாகும் எனவும் கேள்வியெழுப்பினார்.

மட்டக்களப்பு, சித்தாண்டி பிரதேச கால்நடைப் பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் நேற்று 7 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

மேற்குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் மயிலத்தமடு மாதவனை பகுதியில் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த பல வருடங்களாக பல்வேறுபட்ட அரசியல் பிரமுகர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தும் இதுவரையும் அதற்கான எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை. இவ்வாறு நாங்கள் வீதியில் குந்தி இருந்தால் எங்களது குடும்ப வாழ்வாதாரம் மற்றும் கால்நடைகளின் நிலைமை என்னவாகும் ?

யாரும் எங்களைக் கவனிப்பதாக இல்லை. அரசாங்க அதிபரும் எங்களுடன் கலந்துரையாடவில்லை. இனி யாரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது என்று புரியவில்லை.நாங்கள் யாரிடம் போவோம்? எல்லோரிடமும் கையேந்திய நிலையில்தான் இறுதியில் வீதிக்கு வந்துள்ளோம். இது தொடருமானால் எங்களது வாழ்வாதாரமும் அழிந்து எல்லாம் அழியும் நிலை ஏற்படும்.இன்னும் ஒருசில தினங்களில் விதைப்பு வேலைகள் ஆரம்பித்தால் பண்ணையாளர்களுக்கும் அப்பகுதி நில ஆக்கிரமிப்பு விவசாயிகளுக்குமிடையில் முரண்பாடு ஏற்படும். அது பின்னர் கைகலப்பில் முடியும். எங்களது கால்நடைகளைச் சுடுவார்கள். இது நிச்சயம் நடக்கும்.இதனை பொலிஸாரோ, இராணுவமோ, யாரும் கவனிக்காது.முறைப்பாடு பதிவு செய்வதால் எந்தவித பலனும் இல்லை. வாழ விடுவதென்றால் வாழவிடுங்கள் சாகவிடுவதென்றால் எங்களை சாகவிடுங்கள் என்பதுதான் எங்களது இறுதித் தீர்மானமாகும் என்றும் தெரிவித்தார்.



சம்மாந்துறை அல்-ஹம்றா வித்தியாலயத்துக்கு புதிய அதிபராக இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த எஸ்.எச்.எம்.பரீஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா 19 ஆம் திகதி வழங்கினார்.

**படம்:** *சம்மாந்துறை மேலதிக செய்தியாளர்*

## போடியார் புலம்பல்!



**மட்டக்களப்பு சித்தாண்டில மாட்டுப்பண்ணையாளர்கள் ஒரு கிழமையா மேச்சல் தரை கேட்டு போறாடுறாங்க எலுவா...?**

**ஆனா மட்டக்களப்பில கிழக்க மீட்டவந்த அந்த கொட்டப்பாக்கனும், கறுப்புச்சட்டையும் வாய மூடிக்கொண்டு கிடக்கிறத பார்த்தா அந்த பேசா மடந்தைகளுக்கு இது கிழக்கு மீட்கிற வேல இல்ல மண் பேமிட்ட குடுத்து உழைக்கிறதான் தொழில் எண்ட நினைப்பு போல....**

**என்ன நான் சொல்லுறது சரியே எலுவா...?**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு நகரில் இரு தினங்களில் 3 வீடுகள் உடைத்து திருட்டு; ஒருவர் கைது!

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் இரு தினங்களில் 3 வீடுகளை உடைத்து தங்க ஆபரணங்கள், பணம், தொலைக்காட்சி, எரிவாயு சிலிண்டர் ஆகியன திருடப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபரொருவர் நேற்றுமுன்தினம் (20) கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிணங்க மட்டக்களப்பு றொசாரியர் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு வீட்டார் நித்திரையி லிருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த திருடன் தங்க நகைகள், பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளான்.

அதேவேளை, மாமாங்கம் பிரதேசத்தில் வீட்டைப் பூட்டிவிட்டு வெளிநாட்டிலுள்ள அவரது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக சென்ற ஒருவர் 3 மாதங்களின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை வீடு திரும்பியபோது அங்கிருந்த தொலைக் காட்சிப் பெட்டி, எரிவாயு சிலிண்டர் என்பன திருட்டுப் போயுள்ளதையறிந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் நகர்ப் பகுதியிலுள்ள புளியடி வீதியில் வீடொன்றை உடைத்து அங்கிருந்த தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பாக பொலிஸாரின் விசாரணையில் குறித்த வீட்டின் உரிமையாளரின் உறவினரான 29 வயதுடைய ஆண் ஒருவரைக் கைது செய்தனர்.

இதில் கைது செய்தவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய இரு திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ்

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் சிறந்த நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது. ஆண்டின் முற்பகுதியில் பதிவு செய்திருந்த வெற்றிகரமான பெறுபேறுகளைத் தொடர்ந்து மீண்டெழுந்திறனை வெளிப்படுத்தி உறுதியான பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது. நிறுவனத்தின் பிரதான வினைத்திறன் குறிகாட்டிகளில் பதிவு செய்திருந்த வளர்ச்சியினூடாக பங்காளர்களுக்கு பெறுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் நிறுவனம் காண்பிக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸின் தேறிய செலுத்தப்பட்ட கட்டுப்பணம் என்பது முதல் அரையாண்டு காலப்பகுதியில் 13% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. இது தொழிற்றுறையின் வளர்ச்சியான 9% ஐ விட உயர்வானதாகும். வழமையான புதிய வியாபார கட்டுப்பணங்களின் வளர்ச்சி 14% ஆக பதிவாகியிருந்ததுடன், புதுப்பித்தல் கட்டுப்பண வளர்ச்சி 11% அதிகரிப்பையும் குழும ஆயுள் கட்டுப்பணங்களில் 102% வளர்ச்சி பதிவாகியிருந்தமை போன்றவற்றினூடாக ஒட்டு மொத்த வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியிருந்தன.



2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் மூன்றாவது மாபெரும் வழமையான புதிய வியாபார சேவை வழங்குநர் எனும் தனது நிலையை யூனியன் அஷ்யூரன்ஸ் மேலும் உறுதி செய்திருந்தது.

மேலும், நிறுவனத்தின் முதலீட்டு வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 64% எனும் உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. வினைத்திறனான சொத்துகள் ஒதுக்கீட்டு மூலோபாயத்தினூடாக, உயர் வட்டி வீதமான சூழலை சாதகமாகப் பயன்படுத்தியிருந்தமைக்கான எடுத்துக்காட்டாக இது அமைந்திருந்தது. நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் முதலீட்டு இலாகாவிலும் 12% அதிகரிப்பை யூனியன் அஷ்யூரன்ஸ் பதிவு செய்திருந்தது. வரிக்குப் பின்னரான இலாபம் முதல் அரையாண்டில் 90% எனும் பாரிய உயர்வைப் பதிவு செய்திருந்ததுடன், இதில் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உயர் முதலீட்டு வருமானம் முக்கிய பங்காற்றியிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் மூலதன போதுமை விகிதம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை பதிவு செய்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் நிறைவில் 337% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. 2022 டிசம்பர் மாதத்தில் இந்த விகிதம் 194% வளர்ச்சியை எய்தியிருந்தது. நிறுவனத்தின் வினைத்திறனான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் நிர்வாகம் மற்றும் மாற்றமடையும் சூழல்களில் மீண்டெழுந்து இயங்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதாக இந்தப் பெறுபேறுகள் அமைந்துள்ளன.

நிறுவனத்தின் மொத்த சொத்துகளின் பெறுமதி ஜூன் 30 ஆம் திகதியன்று ரூ. 83.6 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. ஆயுள் நிதியத்தின் பெறுமதி ரூ. 60.4 பில்லியனாகக் காணப்பட்டது. இலங்கையின் நம்பிக்கையை வென்ற ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநர் எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்வதாக இந்த நிதிப் பெறுபேறுகள் அமைந்துள்ளன. 2023 ஜூன் மாத நிறைவில் நிறுவனத்தின் சந்தை மூலதனவாக்கம் ரூ. 18 பில்லியனாகப் பதிவாகியிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் நிறுவனத்தின் நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் குறிப்பிடுகையில், "2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் சிறந்த நிதிசார் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். எமது அணியினரின் அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக இந்தப் பெறுபேறுகள் அமைந்திருப்பதுடன், எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் எமது மூலோபாய செயற்பாடுகளின் வினைத்திறனை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது" - என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "வளர்ச்சி மற்றும் நிதிசார் உறுதித் தன்மை ஆகியவற்றில் இந்த சிறந்த பெறுபேறுகள் பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளன. எமது வாடிக்கையாளர்களின் நலனை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கக்கூடிய புத்தாக்கமான மற்றும் தங்கியிருக்கக்கூடிய ஆயுள் காப்புறுதித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நிறுவனம் தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளது" - என்றார்.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள இலங்கையின் மாபெரும் நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. நிறுவனம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. இலங்கையர்களின் ஆயுளை பாதுகாக்கவும் நலனை மேம்படுத்தவும் தன்னை அர்ப்பணித்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ், ஆயுள் காப்புறுதி தீர்வுகளினூடாக பாதுகாப்பு, சுகாதாரம், ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற பல தேவைகளும் நிவர்த்தி செய்யப்படுகின்றன. நாடு முழுவதிலும் பரந்த கிளை வலையமைப்பைக் கொண்டு 3,000க்கும் அதிகமான ஊழியர்களினூடாக செயலாற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ், வாடிக்கையாளர்களை மையப்படுத்தி சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தொடர்ந்தும் தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்தி வருகின்றது. ஆயுள் காப்புறுதித் துறையில் ஏற்படும் மாற்றங்களுக்கமைய தனது செயற்பாடுகளையும் மேம்படுத்தி வருகின்றது.

## மக்கள் வங்கியின் புதிய வாடிக்கையாளர் சேவைக்கு உதவியாளர்கள் நியமனம்




மக்கள் வங்கியில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 500 வாடிக்கையாளர் சேவை உதவியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பணிப்பாளர் சபை உறுப்பினர் மஞ்சுள வெல்லலகே மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் கூட்டுறவு மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்துடன் இணைந்து நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## உஷ்ணத்தைத் தணிக்கவும் கட்டணங்களைக் குறைக்கவும் பயனுள்ள Air Conditioning Tips களை வழங்கும் Samsung இன் Engineer

பருவகாலநிலை மாற்றத்தினால் தூண்டப்படும் உலகளாவிய வெப்ப அலைகள் மிகத் தீவிரமடைந்து வரும் ஒரு சூழ்நிலையில் Samsung Electronics இன் Engineer கள் Samsung இன் பாவனையாளர்கள் தமது Air Conditioning System என்பன இன்னும் அதிக பயன் தரக்கூடிய வகையில் உபயோகிக்க பல பயனுள்ள தீர்வுகளை வழங்குகின்றனர். இந்நடைமுறை நுண்ணறிவு energy efficiency, Wind –Free cooling மற்றும் Effective dehumidification போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது. அதிகரித்து வரும் வெப்பநிலையை மேற்கொள்ளவும் குறிப்பிடத்தக்க வகையில் கணிசமான அளவு சௌகரியத்தை அதிகரிக்கின்றது.

செயல்முறையை மிகவும் எளிதாக்குவதன் மூலம் AI Auto Cooling ஆனது தானாகவே பயன்பாட்டு முறைகள் மற்றும் மற்றைய பிற காரணிகளின் அடிப்படையில் உகந்த பயன்முறையைத் தேர்ந்தெடுக்கின்றது. அதோடு உங்கள் அனுபவத்தை நவீன மயப்படுத்துகின்றது மற்றும் இடைவிடாது Air conditioner On/Off சுழற்சிகளைத் தவிர்ப்பதன் மூலம் Energy Consumption ஐ குறைக்கின்றது.

90 நிமிடங்களுக்கு மேலாக System இயங்குவதானது அதிக Energy-



மற்றும் Energy தொடர்பான செலவீனங்களை நிர்வகிப்பதற்கான ஒரு Powerful Toolkit ஐயே Samsung உருவாக்குகின்றது.

வெப்பநிலையின் உயர்வு காரணமாக ஈரப்பதம் அதிகரிக்கும் போது நாம் அசௌகரியத்தை இடைவிடாமல் உணர முடியும். இச்சவாலை எதிர்கொள்ள Samsung Engineer கள் உங்களின் Air Conditioner களின் தன்மைகளை உங்களின் உடனடிச் சூழலுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்க பரிந்துரைகளை முன்வைக்கின்றனர். Air Solution R&D Group இன் Jun Hwang எனும் உத்தியோகத்தர் கூறுகிறார், "உங்கள் வீட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற விதமாக நடைமுறைப் பயனைத் தெரிவு செய்யவும் Cooling மற்றும் Dry Mode ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், அவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட நோக்கங்களுக்காக தொழிற்படுகின்றன".

Cooling Mode ஆனது Compressor output ஐ சரிசெய்து Minimal Energy Expenditure ஊடாக விரும்பிய வெப்பநிலையை அடைவதன் மூலம் Indoor Space ஐ உடனடியாக குளிர்விக்கின்றது. மாறாக, Dry Mode ஆனது வெப்பநிலையை மாற்றாமல் Humidity ஐ குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கின்றது. இது Indoor Condition நிலைமைகளின் அடிப்படையில் Air Volume மற்றும் Compressor output ஐ மாற்றியமைக்கின்றது. உதாரணத்திற்கு Target Temperature ஐ அடைந்தாலும் Humidity நீடித்தால் Compressor சுறுசுறுப்பான இயங்கு நிலையில் அதிகப்படியான Humidity ஐ பிரித்தெடுக்கிறது. Dry Mode செயல்திறனை ஆராய்ச்சி ஆதரிக்கிறது. இது அதிக Humidity உள்ள சூழ்நிலையில் குளிரூட்டும் பயன்முறையை விட Humidity ஐ பிரித்தெடுக்கின்றது. ஏறத்தாள 2.7 மடங்கு அதிக திறன் கொண்டது. இது Efficiency கொண்டது என ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

Samsung இன் Digital Inverter Boost Technology ஆனது நிலையான வெப்பநிலையைத் தக்கவைத்துக்கொள்கின்றது. அதே வேளை, Energy பயன்பாட்டை 73% வரை குறைக்கின்றது. இது Comfort மற்றும் Cost Saving ஆகியவை தொடர்பாக ஒரு வரப்பிரசாதம் என உறுதியாகக் கூறமுடியும். மெல்லிய காற்று இல்லாமலேயே மிகச் சௌகரியமாக WindFree™ Cooling Mode ஐ அனுபவிக்க முடியும். இப்புதுமையான அம்சமான Micro Air Holes மூலம் குளிர்ந்த காற்றைப் பரப்பி இனிமையான Indoor சூழலை உறுதி செய்கின்றது. மேலும், உஷ்ணமான காலநிலையில் சமையல் செய்வது என்பது மிகுந்த சங்கடமான ஒரு விடயமாகும். உங்கள் Air Conditioner மற்றும் Hood என்பனவற்றினை Synchronize செய்வதன் மூலம் SmartThings மூலமாக விரைவாக சமையல் புகை மற்றும் நீராவி என்பனவற்றை அற்றுப்போகச் செய்யவும் முடியும்.

Samsung Engineer கள் கல்வி மற்றும் தொழில்துறையின் நம்பகத்தன்மையில் ஆய்வுக் கட்டுரைகளின் மதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றனர். இந்த ஆவணங்கள் சிக்கலான தொழில்நுட்பங்களை தெளிவுபடுத்துகின்றன. உண்மைக்குப் புறம்பான கதைகளை தவிர்ப்பதோடு நுகர்வோர் தங்கள் Air Conditioner களை திறம்பட இயக்கிக் கொள்ளவும் உதவுகின்றன.

உலகளவில் வெப்பநிலை தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் Samsung Engineer கள் Samsung பாவனையாளர்களை வருடம் முழுவதும் Comfort மற்றும் Cost Saving க்கு வழிகாட்டியாகத் திகழ்வதில் உறுதியாக உள்ளனர்.

## G r E a b மற்றும் n F an ஸ r இணைந்து E bn வை அறிமுகப்படுத்துகிறது

இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளர்களில் ஒருவரான Hayleys Fabric PLC, தொழில்துறை கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்களாக மாற்ற மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் Pro Green Laboratories உடன் கைகோர்த்துள்ளது.

FaBriEco ஒத்துழைப்பின் நோக்கம் ஆடைத் தொழில்துறையின் துணை தயாரிப்புகளான கழிவாக அகற்றப்படும் சாயங்கள் கழிவாக வீசப்படும் துணிகள் மற்றும் புகையாக பறக்கும் சாம்பல் போன்ற உற்பத்திக் கழிவுகளைப் பயன்படுத்தி உள்ளூர் சந்தைக்கு மலிவு விலையில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தயாரிப்புகளை உருவாக்குவதாகும். இந்த முயற்சியானது Pro Green Laboratories ன் பேராசிரியர் ரங்கிகா யூ ஹல்வத்துரவின் செயற்பாடுகளின் கீழ் நடத்திய ஆய்வின் அடிப்படையில் அமைந்ததுடன் மண், கொன்கிரீட், செங்கற்கள் மற்றும் பாலிமர் சுய-கச்சிதமான மண், செங்கற்கள் போன்ற நிலையான தயாரிப்புகளுக்கான காப்புரிமையை அவர் ஏற்கனவே பெற்றுள்ளார்.

"இந்தக் கூட்டாண்மை பசுமையான எதிர்காலத்தை உருவாக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். Pro Green Laboratories உடன் எங்களின் நிலைத்தன்மை குழுவில் இணைவதன் மூலம் கழிவு நிர்வகிப்பு மற்றும் உற்பத்தியில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இது ஒரு வட்டப் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும்." என Hayleys Fabric இன் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹான் குணதிலக்க தெரிவித்தார்.

பாரம்பரிய கழிவு நிர்வகிப்பு முறைகளைப் பயன்படுத்தாமல் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மீள்சுழற்சி செய்து பயனுள்ள ஒன்றாக மாற்றுவதே Hayleys Fabric நிறுவனத்தின் நோக்கமாகும். பேராசிரியர் ஹல்வத்துர





மற்றும் அவரது குழுவினர் ஆடைத் தொழிலில் இருந்து உருவாகும் அப்புறப்படுத்தப்பட்ட சாயங்கள் கழிவாக வீசப்படும் துணிகள் மற்றும் சாம்பல் ஆகியவற்றைப் பயன்படுத்தி கொன்கிரீட் செங்கற்களை அறிமுகப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இக்கற்கை தொடர்புடைய சோதனைகள் ஆய்வக ஆராய்ச்சியை உருவாக்குகின்றன. அங்கு அவை வெவ்வேறு உள்ளீடுகள் மற்றும் பயன்பாடுகளை ஆராய்கின்றன.

"ஓர் ஆராய்ச்சியாளர் மற்றும் கண்டுபிடிப்பாளர் என்ற முறையில் Hayleys Fabric உடனான எங்கள் கூட்டாண்மை பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தக் கூட்டாண்மை இரண்டு




நிறுவனங்களுக்கிடையில் ஒரு வலுவான பிணைப்பாக இருப்பது மிகவும் முக்கியமானது. அவை நிலைத்தன்மை மற்றும் புத்தாக்கத்தின் வளர்ச்சியில் ஆழமாக அர்ப்பணிப்புடன் உள்ளன. இந்த ஒத்துழைப்பின் மூலம் ஆடைத் துறையில் தற்போதைய தேவைகளின் அடிப்படையில் புரட்சிகரமான தீர்வுகளைக் கண்டறியும் வாய்ப்பைப் பெற்றுள்ளோம். இதன் மூலம் கழிவுப் பொருட்களை மதிப்புமிக்க வளங்களாக மாற்றும் சுற்றுச்சூழல் நட்பு தொழில்நுட்பங்களை உருவாக்கி மேலும் நிலையான மற்றும் சுழற்சிமுறை பொருளாதாரத்தை உருவாக்க முடியும்."

"இந்தக் கூட்டாண்மையின் வலிமை மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நமது பலம் மற்றும் மதிப்புகளை இணைப்பதன் மூலம் ஆடைத் துறையில் நிலையான மாற்றத்தை உருவாக்கி சூழலுக்கு ஏற்ற புத்தாக்கங்களை உருவாக்க முடியும். அதற்கு நாங்கள் தலைமை தாங்குவதில் பெருமை கொள்கிறோம்" - என பேராசிரியர் ஹல்வத்துர தெரிவித்தார்.

அவர்களின் சுற்றுச்சூழல் சமூகப் பொறுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் (ESG) இலக்குகளை அடைய உதவும் Hayleys Fabric இன் பல நிலைத்தன்மை திட்டங்களில் இந்த முயற்சி சமீபத்திய நடவடிக்கையாகும். இந்த நோக்கங்கள் Hayleys Lifecode மூலம் ஈர்க்கப்பட்டு சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புக்கான அவர்களின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன.

தரப்படுத்தப்பட்ட ஆடை மதிப்பீட்டிற்கான நன்கு அறியப்பட்ட ஜெர்மன் தளமான ISPO Textrends இல் Hayleys Fabric மதிப்பீடு செய்யப்பட்டது. கரிம சுற்றுச்சூழல் நட்பு ஜவுளி உற்பத்தி மற்றும் இயற்கை சாய கண்டுபிடிப்பு ஆகியவற்றில் Hayleys Fabric மேற்கொண்ட அர்ப்பணிப்பு காரணமாக இந்த சாதனை கிடைத்தது. உற்பத்திச் செயற்பாட்டில் நிலையான நடைமுறைகளை உறுதி செய்வதில் Hayleys Fabric இன் தீவிர ஆர்வத்தையும் இந்த மதிப்பீடு நிரூபிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilaneditor@gmail.com

# 2023இற்கான விற்பனை மாநாட்டில் மிகச்சிறந்த செயற்றிறனாளர்களின் அதிசிறந்த மற்றும் சிறப்பான வாடிக்கையாளர் சேவையைப் பாராட்டி கௌரவித்திருந்த AIA இன்ஷூரன்ஸ்!



இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக (2021, 2022இல் கெப்பிடல் பைனான்ஸ் இன்டர்நெஷனல் மற்றும் 2019, 2020இல் குளோபல் பேங்கிங் என்ட் பைனான்ஸ் ரிவியு) நிறுவனங்களால் கௌரவிக்கப்பட்டுள்ள AIA இன்ஷூரன்ஸ் சமீபத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயிலுள்ள மொனார்க் இப்பேரியலில் இடம்பெற்ற AIA இன் விற்பனை மாநாட்டில் நிறுவனத்தின் மிகச்சிறந்த வெல்த் பிளேன் செயற்றிறனாளர்களைக் கௌரவப்படுத்தியதன் மூலம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புமிக்க கொண்டாட்டத்தைப் பதிவு செய்திருந்தது.

இந்நிகழ்வு AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர, பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரி உபுல் விஜேசிங்க, பிரதான முகவர் நிறுவன அதிகாரி சானக லியனகே ஆகியோரின் தலைமையின் கீழ் AIAஇன் நிறைவேற்றுக் குழு, சிரேஷ்ட மேலாண்மை அணி, முகவர் நிறுவன செயற்பாட்டு அணிகள், பார்வையாளர்கள், AIAஇன் வெல்த் பிளேனர்கள், வெல்த் பிளேனர்களின் முகாமையாளர்கள், மூன்றாம் நிலையிலுள்ள முகாமையாளர்கள் மற்றும் நாடு முழுவதுமுள்ள விநியோகப் பிரிவு முகாமையாளர்கள் உள்ளடங்கலாக மதிப்புமிக்க விற்பனை சாதனையாளர்களையும் உள்ளடக்கியதாக இடம்பெற்றிருந்தது.

'காலம் முழுவதும் மிகச் சிறந்ததைத் துரத்துவது' என்ற கருப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வானது மிகச்சிறந்த செயற்திறனை வெளிக்காட்டுவதற்கு உதவும் ஆர்வமும், விடாமுயற்சியையும் உடைய AIA வெல்த் பிளேனர்களின் மிகச்சிறந்த செயற்றிறனையே கௌரவித்திருந்தது. எங்களின் வாடிக்கையாளர்கள் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன், மிகச்சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு உதவும் AIA இன் வாக்குறுதியின் நிஜமான தூதுவர்களாக இருப்பதற்காகவும் இவர்கள் இவ்விடத்தில் பாராட்டப்பட்டிருந்தார்கள்.

நிகழ்வின் முக்கியமான மற்றும் சிறப்பான விடயமாக 2022இன் மிகச்சிறந்த சாதனையாளர்களைக் கௌரவிப்பதற்காக வழங்கப்பட்ட ஆறு பிரதான விருதுகளாகவே இது அமைந்திருந்தது. இந்த வருடத்துக்கான மிகச்சிறந்த வெல்த் பிளேனராகக் கண்டி பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த சஞ்சீவனி சோமரத்ன தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன், மாத்தறை பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த உதயா ஹித்தடியகே மற்றும் குருநாகல் பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த அசேல ஜயசிங்க ஆகியோர் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைத் தனதாக்கியிருந்தனர்.

வென்னப்புவ விநியோகப் பிரிவைச் (DU) சேர்ந்த நிமல் பெர்னாண்டோ மிகச்சிறந்த வெல்த் பிளேனர்களின் முகாமையாளருக்கான விருதை வெற்றி பெற்றிருந்ததோடு பாணந்துறை நகர பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த குமார் பெரேரா மற்றும் கொழும்புப் பிராந்தியம் 04ஐச் சேர்ந்த அஜித் இன்திக்க முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை வெற்றி பெற்றிருந்தனர்.

இதேவேளை, பாணந்துறை பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த கிரிஷான் தசநாயக்க மிகச்சிறந்த கிளஷ்டர் வெல்த் பிளேனர்களின் முகாமையாளர் விருதை தனதாக்கியிருந்ததுடன், மொரட்டுவை ADOவைச் சேர்ந்த தக்ஷிலா கொரலாகே இரண்டாம் இடத்தையும், குருநாகல் ADOவைச் சேர்ந்த சந்திமா வன்னியாராச்சி மூன்றாம் இடத்தையும் வெற்றிபெற்றிருந்தனர்.

மிகச்சிறந்த மூன்றாம் நிலையிலுள்ள முகாமையாளர் விருதானது மொரட்டுவை பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் சேர்ந்த (ADO) ரன்சிலு பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்தது. பிரதேச அபிவிருத்தி முகாமையாளர் விருதை திஸ்ஸமஹாராம மற்றும் மாத்தறை பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த திலீபா அமீன்த்ரா வெற்றி பெற்றிருந்ததோடு, மாவனல்லை பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த Y.G.G.B.யட்டிகமன மற்றும் குருநாகல் பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த சமிந்த குணதிலக்க ஆகியோர் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைத் தனதாக்கியிருந்தனர்.

இதேவேளை, நீர்கொழும்பு பிராந்தியம் 1ஐச் சேர்ந்த இரேஷ் சில்வா மிகச்சிறந்த விநியோகப் பிரிவுத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருந்ததோடு, வென்னப்புவைச் சேர்ந்த தரிண்டு வீரகோன் இரண்டாம் இடத்தை இப்பிரிவில் வெற்றிபெற்றிருந்தார்.

AIAஇன் பிரதான முகவர் நிறுவன அதிகாரி சானக்க லியனகே கருத்துத் தெரிவிக்கையில், 'காலம் முழுவதும் மிகச்சிறந்ததைத் துரத்துவது' எனும் எங்களின் பயணத்தில் எங்களுடைய வெல்த் பிளேனர்கள் தங்களது அர்ப்பணிப்பை வெளிக்காட்டியிருந்ததுடன், புதிய தரநிலைகளை நிர்ணயித்து சிறந்த வாடிக்கையாளர் சேவையின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டியிருந்தனர். இலங்கையர்கள் அனைவரும் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன், மிகச்சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு உதவும் எங்களுடைய குறிக்கோளுக்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் அவர்களின் மிகச்சிறந்த சாதனைகளுக்காக அனைத்து வெற்றியாளர்களுக்கும் இவ்விடத்தில் எனது இதயபூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

AIA இன் 'காலம் முழுவதும் மிகச்சிறந்ததைத் துரத்துவது' எனும் கருப்பொருள் வணிகச் செயல்திறனில் AIA வெல்த் பிளேனர்களின் உறுதியான அர்ப்பணிப்புடன் எதிர்பார்ப்புகளை மிஞ்சும் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைவதற்கான அவர்களின் விடாமுயற்சியை எடுத்துக்காட்டுவதாக மட்டுமன்றி வாடிக்கையாளர் சேவையிலும் முதன்மையைப் பிரதிபலிப்பதையும் நோக்காகக் கொண்டமைந்திருந்தது.

# தொடர்ச்சியான சிறப்பு: 2022 ஆம் ஆண்டுக்கான மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்கள் வரிசையில் A

இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, 2022ஆம் ஆண்டில் ஐந்தாவது தடவையாக இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

The American Institute of Certified Public Accountants மற்றும் Chartered Institute of Management Accountants (AICPA & CIMA), The International Chamber of Commerce Sri Lanka (ICCSL) ஆகியவற்றால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த தரவரிசை, பங்குதாரர்களுக்கு நீடித்த மதிப்பை உருவாக்கி நிறுவன சிறப்பை ஊக்குவிக்கும் இலங்கை நிறுவனங்களை அங்கீகரிக்க ஒரு தளமாக செயல்படுகிறது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க கலந்துகொண்டதுடன், இந்த நிகழ்வில் முக்கிய உரையை இலங்கைக்கான ஜப்பானின் பிரதித் தூதுவர் Katsuki Kotaro நிகழ்த்தினார்.

"வலுவான உள்ளூர் மற்றும் உலகப் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்கையில் இலங்கையின் மிகவும் போற்றப்படும் நிறுவனங்களில் ஒன்றாக HNB இன் மீள்உறுதிப்படுத்தல் எமது குழுவின் மதிப்புகள் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு அத்துடன், HNB தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் செயற்பாட்டுச் சிறப்புகள் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றின் வலுவான மற்றும் நெகிழ்ச்சியான அடித்தளத்தைப் பறைசாற்றுகிறது.

"எங்கள் தயாரிப்பு மற்றும் சேவை கோப்புறையில் HNB இன் இடைவிடாத சுத்திகரிப்புடன் இணைந்து நாங்கள் இப்போது அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான ஆதரவை மேலும் அதிகரிப்பதற்கும் இலங்கைப் பொருளாதாரத்தின் அடிமட்டத்திலிருந்து மறுமலர்ச்சியை நோக்கி இட்டுச்செல்வதற்கும் முக்கிய பங்குதாரர்களுடனான கூட்டாண்மை அவசியம்" என HNB முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ஜொனதன் அலஸ் தெரிவித்தார்.

பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்கள் இரண்டுக்கும் திறந்த தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் கடுமையான மதிப்பீட்டு செயல்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதில் CIMA உறுப்பினர்கள் (CGMAகள்) குழுவால் மேற்கொள்ளப்படும் நிதி மதிப்பீடு ஆகியவை அடங்கும். அதன் பிறகு KPMG குழு விருதுகளுக்கான உத்தரவாத பங்குதாரர்களாக செயல்பட்டு மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்து அடுத்த சுற்றுக்கு 20 சிறந்த நிறுவனங்களை தேர்ந்தெடுக்கிறது. இறுதிச்சுற்று நிறுவனங்களின் ஒரு விளக்கக்காட்சியை உள்ளடக்கியது. பொதுவாக அவர்களின் உயர்மட்ட நிர்வாக நடுவர் குழுவால் தெரிவுசெய்யப்படும்.

# கல்முனை அஹ்மட் அலி வைத்தியசாலையின் நான்கு வருடப் பூர்த்தி



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கல்முனை அஹமட் அலி வைத்தியசாலையின் நான்கு வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடுசெய்த விசேட நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை (19) வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கல்முனை அஹமட் அலி வைத்தியசாலையின் தவிசாளர் எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில், பல்துறைக் கலைஞர் என்.எம். அலிக்கானின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் முகாமையாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியால், மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் ஏ.எம்.எம்.ஏ.றசீட், வைத்தியசாலை முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், விசேட வைத்திய ஆலோசகர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், பொது வைத்திய நிபுணர்கள், சத்திர சிகிச்சை மயக்க நிபுணர்கள், சிகிச்சை வழங்கும் நிபுணர்கள், சுகாதார ஊழியர்கள், மருந்தாளர்கள், கதிரியக்க உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், உதவித் தாதியர்கள் மற்றும் வைத்திய சாலையில் கடமை புரியும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்கள் உட்பட ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.







இவ்வைத்தியசாலையில் அனைத்து விதமான மருத்துவத் தேவைகளுக்கும் துரிதமான முறையில் மருத்துவம் செய்யப்படுவதோடு, இச்சேவைகள் அனைத்தும் கல்முனை பிரதேசத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் சேவை மனப்பான்மையுடன் செய்து வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதன்போது கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் விசேட சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யூ. எம்.சமீம் மற்றும் எலும்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் வருண் பிரசாத், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ஸ்ரீநீதன், அம்பாறை பொது வைத்தியசாலையின் சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆர்.நிஷாந்தன் ஆகியோர் இவ்வைத்தியசாலையின் உன்னதமான துரித சேவையை வாழ்த்தியுள்ளனர். இதுவிடயமாக மேற்குறித்த வைத்தியர்கள் சூம் தொழில்நுட்பத்தினூடாக வைத்தியசாலையின் தவிசாளர் எம்.எம்.இஸ்ஸதீனிடம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டனர்.



# அறுகம்பை சுற்றுலாத் திட்டம் விரைவில்

## விசேட நடவடிக்கைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானம்



அறுகம்பை சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தை துரிதப்படுத்தி அப்பகுதியிலிருந்து சுற்றுலாத்துறைக்கு பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

அறுகம்பை பகுதியை அடிப்படையாக கொண்டு அம்பாறை மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற முதற்கட்ட கலந்துரையாடலின்போது அறியப்பட்ட பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது.

அதற்கமைய, இப்பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டின்போது ஏற்படும் சவால்கள் தொடர்பில் விரிவாக அவதானம் செலுத்தப்பட்டதோடு, அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்காக துறைசார் நிறுவனங்களின் தலையீடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சுற்றுலாத்துறை திட்டமும் வெளியிடப்பட்டதோடு, மூன்று வருடங்களுக்கான மேற்படித் திட்டத்தினை ஜனாதிபதியின் கருத்தறிவதற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மேற்படி செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக ஒரு மாதத்தில் மீண்டும் கூடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் டீ.வீரசிங்க, பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன, அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரம மற்றும் துறைசார் நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்துகொண்டனர்.

# அரசத் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் விசேட கவனம் தேவை

## ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது பொதுநலவாய செயலாளர் நாயகம் வலியுறுத்து





இலங்கைக்கும் பொதுநலவாய செயலகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் கடந்த வருடம் ருவண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் பொதுநலவாய செயலாளர் நாயகம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்த வகையில் இந்த சந்திப்பு நியூயோர்க்கில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக்கும் பொதுநலவாய செயலகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் கடந்த வருடம் ருவண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை நிதியளித்தல் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் ஏனைய சவால்கள் குறித்தும் இங்கு உரையாற்றப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில் பொதுவான நிலைப்பாடொன்றை ஏற்படுத்துவதற்காக பொதுநலவாய நாடுகள் அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தில் இலங்கை முன்னிலை வகிக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் சமூகத்துடனான மல்போரா இல்ல கலந்துரையாடலின் (Malborough House Dailogue) முன்னேற்றம் குறித்தும் செயலாளர் நாயகம் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் மற்றும் பொதுநலவாய செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தச் சந்திப்பின்போது கலந்துகொண்டனர்.

# இலங்கையரை போன்று நாட்டுக்குள் நுழைந்த மலேசியர் நாடு கடத்தல்

இலங்கைக் கடவுச்சீட்டுடன் இலங்கைப் பிரஜையை போல நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சித்த மலேசியப் பிரஜை ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குடிவரவுத் திணைக்களத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி அவர் தடுத்து நிறுத்தப்பட்டு, அவர் வந்த அதே விமானத்தில் மீண்டும் அவர் டோஹாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

மலேசியாவைச் சேர்ந்த 33 வயதான இவர், தரகர் ஒருவரின் வழிகாட்டுதலின்பேரில் கடந்த 10ஆம் திகதி அன்று அபுதாபியில் சந்தித்த திருகோணமலையைச் சேர்ந்த 26 வயது தமிழ் இளைஞருக்கு விமான பயணச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டை வழங்கியுள்ளார்.

அந்த ஆவணங்களைப் பயன்படுத்தி இலங்கை இளைஞர் அன்றைய தினம் இங்கிலாந்துக்கு சென்றுள்ளார். பின்னர், இந்த மலேசியப் பிரஜை இலங்கை இளைஞரிடமிருந்து விமான பயணச்சீட்டு, கடவுச்சீட்டு என்பவற்றை பெற்றுக் கொண்டுள்ளார்.

பின்னர், இலங்கைக்கு வந்து கொழும்பில் உள்ள மலேசிய தூதரகத்துக்குச் சென்று தனது கடவுச் சீட்டு தொலைந்துவிட்டதாகவும் புதிய கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடந்த 19ஆம் திகதி மாலை 04.20 மணியளவில் டோஹாவிலிருந்து கட்டார் ஏர்வேஸ் விமானம் KR-654 விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

நாட்டுக்குள் நுழைவதற்குத் தேவையான அனுமதியை அவர் செய்யப்போகும்போது அவர் மொழி பேசுவதில் ஏற்பட்ட சிக்கல் சூழ்நிலையின் அடிப்படையில் இந்த உண்மைகள் அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இந்த மலேசியரை கைது செய்த கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்களத்தினர், அவர் வந்த அதே கட்டார் ஏர்வேஸ் விமானத்தில் மீண்டும் டோஹாவுக்கு அழைத்துச் செல்ல விமான நிறுவனத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# சந்தேக நபர்களுக்கு அடைக்கலம் கொடுத்த சிறைச்சாலை உத்தியோகத்தர் கைது

பொரளை மற்றும் கலாபிடமடை ஆகிய இடங்களில் இடம்பெற்ற இரண்டு கொலைச் சம்பவங்களில் சந்தேகநபர்கள் மூவருக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் கூறப்படும் கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலையின் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்த பயணப்பையில், ஒரு ஜோடி கறுப்புநிற காலணிகள், நீல துண்டு, வெள்ளை நிற காற்சட்டை தொப்பி, கையடக்கத் தொலைபேசி, மோட்டார் சைக்கிள் சாவி மற்றும் அடையாள அட்டை என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 14ஆம் திகதி கலபிடமடை, துனுமலை பகுதியில் வாகனத்தில் பயணித்த வேரகொட ஆராச்சிலாகே சரத் வேரகொடவை துப்பாக்கியால் சுட்க்கொலை செய்வதற்காக மோட்டார் சைக்கிளை செலுத்தியமை தொடர்பில் கடந்த 02ஆம் திகதி வரக்காபொல நியந்துருபொல பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, சிறைச்சாலையின் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டார்.

இதற்கு மேலதிகமாக, இந்த வருடம் மே மாதம் 20ஆம் திகதி துப்பாக்கியால் சுட்டு மனித கொலையை செய்த "வானத்தே சுட்டாங்" என்ற சந்தேகநபருக்கும் இன்னுமொரு அடையாளம் தெரியாத சந்தேகநபருக்கும் தங்கியிருப்பதற்காக குறித்த சிறைச்சாலையின் சார்ஜன்ட்க்கு சொந்தமான இராஜகிரிய நாவல அவென்யூவில் உள்ள தனது மூன்று மாடி வீட்டின் மூன்றாவது மாடியை வழங்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா, நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அன்ஸ்லம் டி சில்வா ஆகியோரின் பணிப்புரையின் பேரில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் துமிந்த ஜயதிலக்க உள்ளிட்ட குழுவினர் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் அதிகாரிக்கு இடையூறு ஏற்படுத்தியவருக்கு விளக்கமறியல்

பிங்கிரிய பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவருக்கு இடையூறு ஏற்படுத்திய பெண் ஒருவரை ஒக்டோபர் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பெட்டிபொல நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஹிகுராக்கொட – தனயாம வீதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி மதியம் இவர் பொலிஸ் நிலைய அலுவலக அறையில் கடமையில் ஈடுபட்டிருந்த போது பெண் ஒருவர் வந்து திட்டி, தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியுள்ளார்.

இதையடுத்து, அந்த பெண் தனது கடமைக்கு இடையூறு விளைவித்ததாக பொலிஸ் அதிகாரி முறைப்பாடு செய்துள்ளார்.

அந்தப் பெண் பிங்கிரிய போவத்த பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாடு செய்த பொலிஸ் பரிசோதகர் கட்டுநாயக்க பிரதேசத்தில் கடமையாற்றும் வேளையில் அந்தப் பெண்ணுடன் உறவு வைத்திருந்துள்ளார். பின்னர் இந்தப் பெண்ணுடனான உறவை நிறுத்தி விட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த பெண், பொலிஸ் அதிகாரி பணிபுரியும் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கும் சென்று தனக்கு நீதி வேண்டுமென தகராறு செய்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பிங்கிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திலீபனின் நினைவு தினத்துக்காக துண்டுப்பிரசுரம் விநியோகம்





புஃகஜிந்தன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் தியாக தீபம் திலீபனின் நினைவுதினத்தினை முன்னிட்டு துண்டுப்பிரசுரம் விநியோகம் நேற்று (21) யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அடுத்த கட்ட சந்ததிக்கு வரலாற்றினை எடுத்துச் செல்லும் முகமாக, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தியாக தீபத்தின் வரலாறு உள்ளடங்கிய துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை, நாளையதினம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் நாளை மறுதினம் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்திலும் பாடசாலை மாணவர்களுக்கு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்படவுள்ளது.

# மகாவலி அதிகார சபையின் நொச்சியாகம முகாமையாளர் மீது இலஞ்ச குற்றச்சாட்டு

இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் நொச்சியாகம, மகாவலி அதிகார சபையின் பதில் முகாமையாளர் இலஞ்ச விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகாவலி அதிகார சபையின் நொச்சியாகம அலுவலகத்தில் வைத்து சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மகாவலி சபையின், நொச்சியாகம அலுவலக அதிகாரி 75ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி, அதிகார சபைக்கு சொந்தமான காணியொன்றை இன்னுமொரு நபருக்கு பெற்றுக்கொடுப்பதற்காக இந்த நிதித் தொகையை இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளதாக குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே, குறித்த அலுவலகத்தை சுற்றிவளைத்து அதன் பதில் முகாமையாளரை கைதுசெய்ய நேர்ந்ததாக இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நொச்சியாகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நேற்று (21) நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# வெள்ள அனர்த்தத்தை தடுக்க புத்தளத்தில் விசேட வேலைத்திட்டம்

*ரஸீன் ரஸ்மின்*

புத்தளம் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வெள்ள அனர்த்தம் இடம்பெறுவதை தடுக்கும் முகமாக புத்தளம் வெஸ்டன் சோல்டன் வீதி ஊடாக களப்புடன் இணையும் கால்வாய் துப்புரவு செய்யப்பட்டது.

கடந்த வருடம் பெய்த கடும் மழை காரணமாக புத்தளத்தில் பல இடங்களிலும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டன. எனினும், தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதை கட்டுப்படுத்தும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில், புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட வெஸ்டன் சோல்டன் வீதியூடாக சிறு கடலுக்கு நீர் சென்றடையும் பிரதான கால்வாயை துப்புரவு செய்வது தொடர்பாக கள ஆய்வு செய்து உடனடி தேவையாக கால்வாய் ஒன்றை வெட்டுவதற்காக இனங்காணப்பட்ட இடத்தில் கால்வாய் ஒன்றும் வெட்டப்பட்டது.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிந்தக அமல் மாயாதுன்ன மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தார்.

இதன்போது, புத்தளம் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிந்தக அமல் மாயாதுன்ன, புத்தளம் நகர சபை செயலாளர் எல்.பீ.ஜீ.பிரீத்திகா, புத்தளம் பிரதேச செயலாளர் (பதில்) சம்பத் வீரசேகர உட்பட அதிகாரிகள் பலரும் உரிய இடத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

மேலும், புத்தளம் நகர சபைக்குட்பட்ட நகர்ப் பகுதிகளில் உள்ள அனைத்து பிரதான கால்வாய்களும் ஏற்கனவே துப்புரவு



செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, அதிகரித்துவரும் டெங்கு அவதான நிலைமையைக் கருத்திற்கொண்டு புத்தளம் நகர சபையின் ஏற்பாட்டில் நகரசபை, புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் புத்தளம் பொலிஸார் ஆகியோர் இணைந்து புத்தளம், தில்லையடி பாடசாலை வீதி மற்றும் சதாமியாபுரம் ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன், உரியவர்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நட்புறவு மாநாட்டில் பங்குபற்ற குழுவொன்று சீனாவுக்கு விஜயம்

சீனாவிலுள்ள நிங்சியா சர்வதேச நட்புறவுச் சங்கத்தின் அழைப்பின் பேரில் (Ningxia International Friendship Cities Forum) இலங்கை - சீனா சமூக மற்றும் கலாசார நட்புறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் பேருவளை நகரசபை முன்னாள் பிரதி மேயருமான இப்திகார் ஜெமீல் இலங்கை - சீனா சமூக மற்றும் கலாசார நட்புறவுச் சங்க தலைவர் இந்ரானந்த அபேசேகர, நிறைவேற்றுக் குழு உறுப்பினர் இபாம் ஹனபி உட்பட சங்க முக்கியஸ்தர்கள் 10 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவுக்கு பயணமாகினர்.

சீனாவில் உள்ள நிங்சியா (Ningxia yin chuan) நடைபெறும் சர்வதேச நட்புறவுகள் தொடர்பான மாநாட்டிலும் இவர்கள் பங்குபற்றுவர். புதிய மேம்பாடு, பகிரப்பட்ட நன்மைகள், சர்வதேச நட்புறவு என்ற தொனிப்பொருளுடன் இம் மாநாடு இடம்பெறும்.

நாடுகளுக்கிடையே தொழில் துறை மேம்பாடு, முதலீடுகள், சமூக, கலாசார, அபிவிருத்தி மேம்பாடுகள், நட்புறவை வலுவடையச் செய்தல் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

பேருவளை நகரையும் சீனாவின் நிங்சியா மாகாணத்தையும் இணைத்து கல்வி, சுகாதார, விளையாட்டு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடலிலும் பங்குபற்றவுள்ளதாக இலங்கை-சீன சமூக மற்றும் கலாசார நட்புறவுச் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர் இபாம் ஹனபி தெரிவித்தார்.

# நீர் விநியோகத்தை துண்டிக்கச்சென்ற உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல்

நீர் விநியோகத்தை துண்டிக்கச் சென்ற உத்தியோகத்தர்களை தாக்கிய நபருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான உத்தியோகத்தர் சிகிச்சைக்காக பண்டாரகம மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டாரகம மெதகம, மினிமுத்து மாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றில் 32ஆயிரம் ரூபா குடிநீர்க் கட்டணம் பல மாதங்களாக செலுத்தப்படாமையால் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழுவொன்று நீர் இணைப்பை துண்டிக்க சென்றுள்ளனர்.

குடிநீர் விநியோகம் துண்டிக்கப்படுவதாக அப்பகுதி மக்களிடம் தெரிவித்துவிட்டு, பைப் விநியோகத்தை துண்டித்துள்ளனர்.

உடனே வீட்டுக்குள் இருந்து வந்த சந்தேகநபர், உத்தியோகத்தர் ஒருவரை கல்லால் தாக்கி, சட்டை கொலரை பிடித்து உதைத்து, மண்வெட்டியை எடுத்து "தண்ணீர் கொடுங்கள் இல்லை என்றால் நாலு பேரையும் இங்கேயே கொன்று விடுவேன்" என மிரட்டியுள்ளார். இதனால் பயந்துபோன உத்தியோகத்தர்கள், நீர் விநியோகத்தை சரி செய்துவிட்டு அங்கிருந்து வெளியேறிச்சென்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.



மத்திய பிரதேசத்தின் ஆதிசங்கரர் கல்வி கற்ற நகரான ஓம்காரேஷ்வரில் பல்வேறு உலோகங்களைக்கொண்டு சுமார் 108 அடி உயர பிரம்மாண்ட சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையின் பீடம் மட்டும் 54 அடி. 12 ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் ஒன்றாக பிரசித்திபெற்ற ஓம்காரேஷ்வர் நகரில் ரூ. 2,141.85 கோடியில் இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளது. ஒற்றுமையின் சிலை (ஏகாத்மதா கி பிரதிமா) என சிலைக்கு பெயரிடப்பட்டுள்ளது.

## இந்தியா – கனடா இருதரப்பு உறவில் அதிகரிக்கும் விரிசல்

# கனடாவில் மேலுமொரு காலிஸ்தான் பிரிவினைவாதி சுட்டுக்கொலை

## மறு அறிவிப்பு வரை 'விசா' சேவைகளை நிறுத்திய இந்தியா

கனடாவின் வின்னிபக் பகுதியில், மற்றொரு காலிஸ்தான் பிரிவினைவாதியொருவர் நேற்று (21) சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இதனால் கனடா மற்றும் இந்தியாவுக்கிடையேயான இருதரப்பு உறவில் விரிசல் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், விசா வழங்கும் சேவையை இந்தியா நிறுத்தியுள்ளது. இதன்படி, கனடாவிலிருந்து இந்தியா வருவதற்கான 'விசா' சேவைகளை மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்திவைக்குமாறு விசா சேவை மையங்களிடம் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

**பயண எச்சரிக்கையை நிராகரிக்கும் கனடா**

கனடாவில் பாதுகாப்பு குறித்து இந்தியர்களுக்கு மத்திய அரசு வழங்கிய பயண எச்சரிக்கையை நிராகரித்திருக்கும் கனடா அரசு, உலகிலேயே மிகவும் பாதுகாப்பான நாடு கனடா என்றும் தெரிவித்துள்ளது.

உலக செய்திகள்

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில், இரு நாடுகளுக்கும் இடையே தூதரகளவில் ஏற்பட்டிருக்கும் பிணக்குகளையும் தாண்டி, இரு நாட்டினரும் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கனடா அரசு வலியுறுத்தியிருக்கிறது.

**நிஜார் சுட்டுக்கொலை**

இந்தியாவில் சீக்கியர்களுக்குத் தனி நாடு வேண்டும் என காலிஸ்தான் ஆதரவு குழுக்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்தி கனடாவிலுள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

கனடாவிலுள்ள காலிஸ்தான் புலிப் படைப் பிரிவின் தலைவரான ஹர்தீப் சிங் நிஜார் மற்றும் காலிஸ்தான் ஆதரவு குழுக்களின் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கனடா அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அதில் தாங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக கனடா அரசு தெரிவிக்கப்பட்டபோதிலும் அங்கு காலிஸ்தான் ஆதரவு குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், காலிஸ்தான் புலிப் படைப் பிரிவின் தலைவரான ஹர்தீப் சிங் நிஜார், கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தியாவால் தேடப்படும் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட அவர், கனடாவில் குடிமகனாக இருந்துள்ளார். மேலும், அவர் சுர்ரே நகர குரு நானக் சீக்கிய குருத்வாராவில் தலைவராகவும் இருந்துள்ளார். இவருடைய படுகொலைக்கு இந்திய அரசின் முகவர்களுக்கு (ஏஜெண்ட்) தொடர்புள்ளதாக காலிஸ்தான் தரப்பில் குற்றச்சாட்டு எழுந்தது.

**இந்தியாவுக்கு தொடர்பு - கனடா**

இந்நிலையில், பாராளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ,

"இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் படுகொலைக்கும் தொடர்பிருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன. கனடாவின் குடிமகன் ஒருவர் படுகொலைக்கு அந்நியர் ஒருவரின் அல்லது வெளிநாட்டு அரசின் தொடர்பு இருப்பதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால், சில இந்தோ-கனேடியர்கள் கோபத்திலும் அச்சத்திலும் உள்ளனர். இந்த விவகாரத்தில், உண்மை விவரங்கள் தெரிய கனடாவுக்கு இந்திய அரசு ஒத்துழைப்பு தர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

**வெடித்தது மோதல்**

இதனால் இந்தியா - கனடா இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அதன்படி இந்தியத் தூதரக அதிகாரியை கனடா வெளியுறவுத்துறை அமைச்சு வெளியேற உத்தரவிட்டிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக கனடா



சுக்தூல் சிங்

தூதரக உயர் அதிகாரியை ஐந்து நாட்களுக்குள் வெளியேற இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு உத்தரவிட்டிருந்தது.

மேலும், ஹர்தீப் சிங் நிஜாரின் கொலைக்கும் இந்தியாவுக்கும் தொடர்பிருப்பதாக கனடா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கு இந்திய அரசு மறுப்புத் தெரிவித்திருந்தது. மேலும், இது அடிப்படை ஆதாரமற்ற அபத்தமான குற்றச்சாட்டு என கண்டனம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, காலிஸ்தான் தலைவர் கொலையில் இந்தியா மீது கனடா அரசு குற்றஞ்சாட்டியதற்கு அமெரிக்கா மற்றும் பிரித்தானியா நாடுகள் கவலை தெரிவித்திருந்தன. அத்துடன், இந்தியாவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தொடரும் என பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனங் தெரிவித்திருந்தார்.

**கனடா வாழ் இந்தியர்களுக்கு எச்சரிக்கை**

இதனையடுத்து, கனடாவில் வாழும் இந்தியர்கள், மாணவர்கள் உட்பட அனைவரும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சின் எக்ஸ் (ட்விட்டர்) பக்கத்தில், "கனடாவிலுள்ள அனைத்து இந்தியர்கள் மற்றும் அங்கு செல்லவிருக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கனடாவில் அச்சுறுத்தல் உள்ள பகுதிகளுக்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்" என்று தெரிவித்திருந்தது.

**காஷ்மீருக்கு செல்லவேண்டாமென கனேடியர்களுக்கு எச்சரிக்கை**

கனடா குடிமக்கள் காஷ்மீருக்கு செல்வதைத் தவிர்க்குமாறு அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் எதிர்பாராத சூழல் நிலவுவதாகவும், தீவிரவாத அச்சுறுத்தல், பயங்கரவாதம், கடத்தல் போன்ற பிரச்சினைகள் இருப்பதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

**மேலுமொரு காலிஸ்தான் பிரிவினைவாதி சுட்டுக்கொலை**

இந்நிலையில், கனடாவின் வின்னிபக் என்ற பகுதியில் நேற்று (21) மற்றுமொரு காலிஸ்தான் பிரிவினைவாதி சுட்டுக்கொல்லப்பட்டார். சுக்தூல் சிங் என்ற அந்த காலிஸ்தான் பயங்கரவாதி, இரண்டு கும்பல்களுக்கு இடையே நடந்த துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் இந்தியா- கனடா இடையேயான இருதரப்பு உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

**விசா சேவை இரத்து**

இந்நிலையில், விசா வழங்கும் சேவையை இந்தியா நிறுத்தியுள்ளது. இதன்படி, கனடாவிலிருந்து இந்தியா வருவதற்கான 'விசா' சேவைகளை மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்திவைக்குமாறு விசா சேவை மையங்களிடம் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இதனால் கனடாவிலிருந்து இந்தியாவுக்கு எவரும் வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து கனடா செல்லும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு மத்திய அரசு நேற்றுமுன்தினம் பயண எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், கனடாவிலிருந்து வருவோருக்கு விசா வழங்குவதை இந்திய தூதரகம் நேற்று (21) நிறுத்தியது.

## குறும்படமானது
### கிம்மின் ரஷ்ய சுற்றுப்பயணம்

ரஷ்யாவுடனான உறவை மேலும் வலுப்படுத்துவதற்காக அந்நாட்டுக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் 6 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்ததை வடகொரிய அரசு குறும்படமாக வெளியிட்டுள்ளது.

கிம் தனது கவச ரயிலில் ரஷ்யா சென்றது, ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்தது, போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் மற்றும் அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ஏவுகணைகளை பார்வையிட்டது, பாலே நடனத்தை கண்டுகளித்தது என ஒன்றரை மணிநேர காணொளியாக நிகழ்ச்சி நிரல்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.



டில்லி ரயில் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, பயணிகளின் உடைமைகளை தூக்கிச் செல்லும் புகைப்படங்கள் வைரலாகியுள்ளன.

## சூதாட்டத்தில் சிக்கிய மூன்று இந்தியர்கள்; ஐ.சி.சி. அதிரடி

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற எமிரேட்ஸ் ரி10 லீக் தொடரின்போது பல்வேறு ஊழல்கள் செய்ததாக இந்திய அணியின் உரிமையாளர்களான பராக் சங்வி மற்றும் கிரிஷன் குமார் சவுத்ரி உட்பட எட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகள் மீது சர்வதேச கிரிக்கெட் பேரவை குற்றஞ்சாட்டியுள்ளது. இரண்டு இந்தியர்களும் புனே டெவில்ஸ் அணியின் இணை உரிமையாளர்கள் மற்றும் அந்த சீசனில் அவர்களது வீரர்களில் ஒருவரான முன்னாள் பங்களாதேஷ் வீரர் நசீர் ஹொசைன் லீக்கின் ஊழல் எதிர்ப்பு விதிமுறைகளை மீறியதற்காக குற்றஞ்சாட்டப்பட்டனர்.

இதேபோன்று இந்தியாவைச் சேர்ந்த பேட்டிங் பயிற்சியாளர், சன்னி தில்லான் ஊழல் புகாரில் சிக்கியுள்ளார். 2021 அபுதாபி ரி10 கிரிக்கெட் லீக் தொடர்பான குற்றச்சாட்டுகள் மற்றும் அந்தப் போட்டியின் போட்டிகளை ஊழல் செய்ய முயற்சித்த போதுதான் இவர்கள் சிக்கியுள்ளனர். இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், சங்வி மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் 2.2.1 மற்றும் 2.4.6 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று கிரிஷன் குமார் மீது ஊழல் தொடர்பாக உரிய நேரத்தில் அதிகாரிகளிடம் புகார் அளிக்காமல் விட்டதற்காக தடை செய்யப்பட்டுள்ளார். 3 இந்தியர்கள் உட்பட 6 பேர் தற்காலிகமாக கிரிக்கெட் விளையாடுவதிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர், மேலும் அனைவருக்கும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க 14 நாட்கள் அவகாசம் உள்ளது.

## இடைநீக்கம் செய்யப்பட்ட புஜாரா



இங்கிலாந்தின் கவுண்டி கிரிக்கெட்டில் ஆடிவரும் இந்திய வீரர் செட்டேஷ்வர் புஜாரா நடத்தை மீறல் காரணமாக ஈ.சி.பியால் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். சசெக்ஸ் கவுண்டி கிரிக்கெட் கிளப்பின் கெப்டனாக இருக்கும் புஜாரா, ஒரு போட்டிக்கு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார், மேலும் சசெக்ஸ் நடத்தை விதிமுறைகளை அப்பட்டமாக மீறியதற்காக 12 புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன.

புஜாரா ஒரு போட்டியில் இடைநீக்கம் செய்யப்பட்டதற்குக் காரணம், அவரது சக வீரர்களான ஜோக் கார்சன் மற்றும் டாம் ஹெய்ன்ஸ் ஆகியோரின் விளையாட்டுத்தனமான நடத்தைதான். ஹோவில் நடந்த சசெக்ஸ் மற்றும் லீசெஸ்டர்ஷயர் போட்டியின்போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. புஜாரா இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையின் தொழில்முறை நடத்தை விதிமுறைகளை மீறவில்லையென்றாலும், கார்சன் மற்றும் ஹெயின்ஸின் நடத்தையைத் தடுக்கத் தவறியதே அவரது இடைநீக்கத்துக்குக் காரணம்.

## அக்கரைப்பற்று லோர்ட்ஸ் அணி சம்பியன்

*மீரா நகர் செய்தியாளர்*

அக்கரைப்பற்று ரிபில் பீ விளையாட்டுக் கழகத்தின் 17ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட அணிக்கு 8 பேர் 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி - 2023 அக்கரைப்பற்று லோர்ட்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.



அக்கரைப்பற்று பதுர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் கழகத்தின் தலைவர் முஹம்மட் பெரோஸ் தலைமையில் நடைபெற்றது. இத்தொடரின் இறுதிப்போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் அணியும், அக்கரைப்பற்று லோர்ட்ஸ் அணியும் மோதின. இத்தொடரின் சகலதுறை வீரராக பவர் ஸ்டார் அணியின் சகலதுறை வீரர் சஜாத் தெரிவுசெய்யப்பட்டார்.

# 19ஆவது ஆசிய விளையாட்டு விழா நாளை ஹாங்சூவில் ஆரம்பம்

## இலங்கையிலிருந்து 96 வீர, வீராங்கனைகள் பங்கேற்பு








*ஏ. அகீல் சிஹாப்*

19ஆவது ஆசிய விளையாட்டு விழா சீனாவின் ஹாங்சூ நகரில் நாளை 23ஆம் திகதிமுதல் ஒக்டோபர் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்த விளையாட்டு விழா கடந்த 2022ஆம் ஆண்டு நடத்த திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், கொரோனா வைரஸ் தொற்று மற்றும் பல்வேறு புவியியல் மாற்றங்கள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் ஒரு ஆண்டின் பின்னர் நாளை ஆரம்பமாகிறது.

இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் 40 விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, ஆடவர் மற்றும் மகளிர் ஆகிய இரு பிரிவுகளில் கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளது. போட்டிகள் அணிக்கு 20 ஓவர்கள்கொண்ட ரி20 கிரிக்கெட் வடிவில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன் 2010 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் கிரிக்கெட்டும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்பின் சர்வதேச போட்டிகளை காரணங்காட்டி இந்திய கிரிக்கெட் சபை ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு அணியை அனுப்பவில்லை. இதனால், 2018ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலிருந்து கிரிக்கெட் நீக்கப்பட்டது.

ஆனால், கிரிக்கெட்டை மீண்டும் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், 2023ஆம் ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ள 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கிரிக்கெட்டை இணைக்க ஆசிய ஒலிம்பிக் சம்மேளனம் ஒப்புதல் வழங்கியது.

மொத்தமாக 16 நாட்கள் நடைபெறவுள்ள 40 நிகழ்ச்சிகளில் இலங்கை வீரர்கள் 20 விளையாட்டு நிகழ்ச்சிகளில் போட்டியிடவுள்ளமை சிறப்பம்சமாகும். ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கையிலிருந்து 96 வீரர்கள்கொண்ட குழு பங்கேற்கவுள்ளது. இதில் 62 வீரர்களும், 34 வீராங்கனைகளும் உள்ளடங்குகின்றனர். இது தவிர, அதிகாரிகள் உட்பட 57 பேருக்கு இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் பங்கேற்க விளையாட்டுத்துறை அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார்.

அவர்களில் 20 முகாமையாளர்கள், 24 பயிற்சியாளர்கள், 6 பேர் கொண்ட மருத்துவக் குழு மற்றும் 7 தேசிய ஒலிம்பிக் குழு அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். மொத்தமாக இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றும் இலங்கை அணியில் 153 பேர் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த 2018 ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை எந்தவொரு பதக்கத்தையும் வெல்லாத நிலையில் இம்முறை பதக்கங்களைக் குறிவைத்து இலங்கை வீர, வீராங்கனைகள் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7